# சிதம்பர இரகசியம்



ப்ரக்ஞன்

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | சிதம்பர இரகசியம் |
| **தெளிவுரை** | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| **வகை** | : | தன்னாட்டம் |
| **முதற்பதிப்பு** | : | 2019 |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **பக்கங்கள்** | : | 73 |
| **விலை** | : | அக விழிப்பு |


**பதிப்பாளர்** : ஓம் கிராபிக்ஸ்

கோயமுத்தூர்.

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 5 |
| 1 | ஸ்ரீ நடராஜ தத்துவம் | 13 |
| 2 | சிதம்பரம் ஸ்தல புராணம் | 15 |
| 3 | புண்டரீகபுர மஹாத்மியம் | 16 |
| 4 | திலவன மஹாத்மியம் | 17 |
| 5 | வியாக்ரபுர மஹாத்மியம் | 18 |
| 6 | சிதம்பர கோயிலின் ஆலய அமைப்பு | 24 |
| 7 | சிதம்பர ஆலயத்தின் தத்துவம் | 25 |
| 8 | சிதாகாசம் – தத்துவாதீத ஸ்வரூபம் | 32 |
| 9 | ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் கோலம் | 33 |
| 10 | ஸ்ரீ நடராஜ மூர்த்தியே பஞ்சாக்ஷர வடிவம் | 34 |
| 11 | ஆனந்த தாண்டவத்தின் தத்துவம் | 36 |
| 12 | பஞ்ச கிருத்திய தத்துவம் | 37 |
| 13 | பஞ்சாக்ஷர ரகசியம் | 41 |
| 14 | பஞ்சாக்ஷரத்தின் வகைகள் | 46 |
| 15 | மனித சரீரமே மகத்தான சாதனம் | 49 |
| 16 | ஈஸ்வரனின் சத்ய சங்கல்பம் | 57 |
| 17 | ஈஸ்வரன் ஸ்வரூபம் (பெருமை) | 59 |
| 18 | பேருணர்வு அனுபவம் | 60 |
| 19 | இறைவனின் நடனம் | 65 |

ஓம் தத் சத்

# சிதம்பர இரகசியம்



நூல் ஆசிரியர்

**ப்ரக்ஞன்**

ஓம் ஸ்ரீ பரமாத்மனே நம:

# சிதம்பர இரகசியம்

## முன்னுரை

உண்மை இருக்கும் இடத்தில், எப்பொழுதும் உற்சாகம் இருக்கும். உற்சாகம் இருக்கும் இடத்தில் உயர் அறிவு பிரகாசிக்கும். இந்த உண்மை, உற்சாகம், மற்றும் உயர் அறிவு என மூன்றும் இணைந்து இருக்கின்ற இடமே, இறைவனை அறிகின்ற உன்னத மனம்.

இவ்வாறு இந்த மூன்றும் குடி கொண்டுள்ள உன்னத **"மனம்"** படைத்த மனிதன் என்பதினால், அந்த மனிதன் மட்டுமே, மனதை விசாரித்து, விடை கண்டு கொள்ளும் பொழுது, இந்த உடலுக்குள்ளே உள்ள வெளியை வெகு எளிதாக அறிந்துக் கொள்கிறான்.

அத்தகைய வெட்ட வெளியை வெகு சுலபமாக தன் உடலுக்குள்ளேயும், உடலுகுக்கு வெளியேயும் வெகு சுலபமாக யார் ஒருவர் அறிகிறாரோ, அவரே அகண்டமாகவே **"நான்"** இருக்கிறேன் என்ற அரிய உண்மையை அறிகிறார்.

அதாவது, இந்த பூ உலகில் சிதம்பரம் என்று அழைக்கப் படுகின்ற நடராஜர் திரு நடனம் புரியும் ஸ்தலம் இருப்பதுப்

போன்று, நம் அக உலகில் அருமையான அந்த அறிவு நடனமிடும் ஸ்தலம் ஒன்று இருக்கிறது.

ஆம், அதுவே **“மனம்”** எனப்படுகிறது.

அதாவது, சிதம்பரம் என்பதில் **“சித்”** என்றால், "அறிவு" என்றும், **“அம்பரம்”** என்றால், "ஆகாசம்" என்றும் அழைக்கப் படுகிறது. ஆக, அந்த அறிவு நடனமிடும் ஆகாசத்தை **சிதம்பரம்** என்று கூறப்படுகிறது.

இதைத்தான் இந்த பூ உலகில் உள்ள சிதம்பரம் சன்னதியில் **“சிதம்பர இரகசியம்”** என்று கூறுகின்றனர்.

ஆகவே, சித் + அம்பரம் – **சிதம்பரத்தில்,** அதாவது, சிதாகாசத்தில் (அறிவாகசத்தில்) ஆனந்த தாண்டவம் புரிகின்ற சிவமாக ஸ்ரீ நடராஜனின் திவ்யமான இருப்பிடம் மனித தேகத்தின் உள்ளே உள்ள ‘உள்ளம்’ என்ற உன்னத இடமே **“ஹ்ருதயம்”** என்று அழைக்கப்படுகிறது.

(ஹ்ருதயம் என்பதில் ஹ்ருதி - இதயத்திற்குள் + அயம் - வீற்றிருப்பவன் என்று பொருள்).

ஆக, எந்த மனம் தூய்மையாக இருக்கிறதோ, அந்த மனம் இறைவனை அறிகிறது. அனுபவிக்கிறது.

பிரபஞ்சமாகிய இந்த ஆடலரங்கத்தில் இடை விடாது ஆடும், அந்த ஆடலரசன் ஆடவில்லை எனில், ஒருவரும் இங்கே உயிர் வாழ்வது ஏது?

இப்படி, மனித தேகத்தில் உள்ள ஹ்ருதயத்தில் இறைவனின் ஆடல் மகத்துவத்தை அறிகின்ற ஆற்றல் அனேக ஞானிகளுக்கு இருந்திருந்தது.

அவன் ஆடுவது ஆனந்தத் தாண்டவம். இந்தத் தாண்டவம் பல வகைப்படுகிறது.

சிதம்பரம் கோயில் மூலஸ்தானத்தில் உள்ள நடராஜர் சிலை சிற்பத்தின் வலது பக்கமாக பார்த்தோ மானால், அங்கு ஒரு திரை தொங்க விடப்பட்டிருக்கும். அந்தத் திரையை எல்லா நேரமும் திறந்து வைத்துத் தரிசனம் செய்து வைக்க மாட்டார்கள்.

ஏனெனில், அதற்குள்ளேதான் **"சிதம்பர ரகசியம்"** இருக்கிறது என்பார்கள். இது தான் இந்தக் கோயிலின் முக்கியத்துவமும் புனிதமும் கூட.

இறைவனின் உருவ தத்துவமான சிவலிங்க தத்துவத்தை மட்டுமல்லாது, உருவமற்ற அந்தப் பரம் பொருளின் அரூப தத்துவத்தையும், எல்லையற்றப் பரம்பொருள் எங்கும், எதிலும் விரிந்து பரந்து இருப்பதையும் இங்கு ரகசியமாகக் கூறப்படுகின்றது.

ஆகாயம் எவ்வாறு உருவம் இல்லாமல் இருந்தாலும், பார்ப்பதற்கு உருவம் இருப்பதைப் போன்று தோன்றுகின்றதோ, அவ்வாறே இந்தப் பரம் பொருளும் உண்மையில் உருவமற்றது.

ஆனால், பார்ப்பதற்கு உருவம் இருப்பது போன்று தோன்றுகிறது. உண்மையில் ஆகாயத்திற்கு உருவம் கிடையாது என்பது எல்லோருக்கும் தெரியும்.

அந்த ஆகாய தத்துவமே **"பிரம்மம்"**, **"சிவம்"**, **"இறைவன்"**, **"அல்லா"**, **"பரமபிதா"** என பலவாறாக நம்மால் அழைக்கப்படுகிறது.

பரம்பொருள் எல்லையற்று பரந்து விரிந்து, ஆகாயம் போன்று எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்து காணப்படுகின்றது என்பதினால், அதை ஆதியில் வாழ்ந்த மக்கள் **"நிர்குணம்"** என்று அறிந்து, அதற்கு உருவகப்படுத்தி வழிபாடு செய்ய வில்லை. நிர்குணம் என்றால், குணங்கள் அற்றது, மலங்கள் அற்றது, உருவம் அற்றது எனலாம்.

அதுவே, நாளடைவில், சாதாரண மனிதனுக்கு இறைவனை வெட்டவெளியில் வெளிப்புறத்தில், அல்லது அகத்தில் உருவம் இல்லாமல் காட்ட முடியாது என்பதினால், ஒரு உருவத்தில் அதை வடித்துக் காட்டி, அந்த இறைவன் இப்படித்தான் இருப்பான் என்று அவனை உருவத்தில் எண் குணத்தான் ஆக மாற்றி, எல்லோராலும் வழிபாடு செய்வது என்பது, மனித மனம் பக்குவப்படுவதற்காகத்தான் எனலாம்.

ஆகவே, காலப் போக்கில் வழிபாட்டில் இரு முறைகள் ஏற்பட்டன. ஒன்று உருவ வழிபாடு. மற்றது அருவ வழிபாடு ஆகும்.

அருவ வழிபாடு என்பது நிர்குண உபாசனை எனப்படும். அதாவது, உருவமற்ற, குணங்களற்ற வெட்ட வெளியை மட்டுமே வழிபடுவது.

**வெட்டவெளி தன்னை மெய்யென்றிருப்பார்க்கு**
**பட்டயம் ஏதுக்கடி குதம்பாய் பட்டயம் ஏதுக்கடி!**

**– குதம்பைச் சித்தர்.**

(பட்டயம் என்பது தாமிரத்தில் செய்யப்பட்ட கடவுள் சிலைகளை குறிக்கிறது. இன்னும் சிலர் பூமியில் குறிப்பிட்ட அந்த இடத்திற்கு மட்டும் பட்டா கொடுப்பதைப் போன்று, அகண்டமாக இருக்கும் நான் என்னை ஏன் குறிப்பிட்ட எல்லைக்குள் (Limitation) குறுக்கிக்கொள்ள வேண்டும் என்ற பொருளில் பட்டயம் என்ற வார்த்தையை அவர் கையாளுவ தாகக் கூறுவர். ஆக, எது எப்படியோ, "**நான் எல்லையற்றவன்**" என்ற உண்மையை ஒவ்வொருவரும் உணர்ந்தால் போதும்.)

ஆதாலால், இந்த அருவ வழிபாடு என்பது, எல்லோராலும் எளிதாக கொண்டுவர முடியாதது. அதுவும், சாதாரணமாக உள்ள பாமர மக்களால் நினைத்துக் கூடப்பார்க்க முடியாத ஒன்று.

காரணம், அந்த அகண்ட அறிவை ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் ஆன, புற அறிவினால் புரிந்துக் கொள்ள முயற்சிக்கும் சாதாரண மனிதன் முதல் படியாக மனதில் ஏற்றி

வைக்கப்பட்ட எண்ணங்களை எல்லாம் விசாரித்து, அதன் நன்மை, தீமைகளை பகுத்தறிந்து, மனத்தூய்மை அடைய வேண்டுமானால், அவனது மனம் பற்றிக் கொண்டுள்ள பணத்தை விடுத்து, குணத்தை அறிய வேண்டும். அதற்காக அவனுக்கு கொடுக்கப்படுகின்ற மனப் பயிற்சிகளில் இந்த உருவ வழிபாடும் உண்டு.


அத்தகைய உருவ வழிபாட்டின் மூலம், மனம், உடல், உலகம் இவைகளைக் கடந்து, தன்னுள்ளே உள்ள ஹ்ருதயத்தில் அந்தத் தலைவனையுணர்ந்து, பரிபூரணப் பேரானந்தத்தைப் பெற பெரும்பாலான மக்களுக்கு இந்த சகுண பிரம்ம உபாசனை உதவும்.

அதுவே, யோகிகளும், ஞானிகளும் சாஸ்திர விசாரத்தின் வாயிலாகவும், சத்குருவின் வாயிலாகவும், தங்களது அறியாமையை நீக்கி, தன்னை யார்? என்று விசாரித்து, தன் உண்மை சொரூபத்தை உணர்ந்து, தன்னில் தானாய் நிற்கின்ற, அந்த தன்மயமாதல் நிலையிலே, தங்கள் உள்ளேயுள்ள சிதாகாசத்தைக் (ஹ்ருதயத்தை) கொண்டு, அந்த சித்தத்தின் உள்ளே சிவத்தை வழிபட்டு வந்தவர்களையே “சித்தர்கள்” என்று போற்றுகிறோம்.

அத்தகைய சித்தர் பெருமக்களே, அந்த பரிபூரண சக்ஷிதானந்தத்தை உள், வெளி கடந்து உள்ளத்தில் உணர்ந்துக் கொண்டவர்கள் ஆதலால், அவர்களே, அந்த பராகாசத்தின் பரவசத்தில் திளைத்து நின்று, என்றும் நிலையான அந்த நிர்குணத்தை பூசிக்கத் தகுதியுடைவர்கள் ஆவார்கள்.

அதுவும், அவர்களால் மட்டுமே உருவமற்ற அந்தப் பரவெளியை, அதாவது நிர்குண பிரம்மத்தை தன்னில் தானாய், எங்கும், எதிலும் எல்லையில்லாத அதை அணுவுக்குள் அணுவாகவும், பெரியதில், பெரியதாகவும் கொண்டு, அதை தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என கண்டு வழிபட முடியும்.

அவர்கள் அடைந்த அந்த தத்துவ ஞானத்தை (சாஸ்திர விசாரத்தினால் அடைந்த அறிவை) சாதாரண மனிதனும், தன் வாழ் நாளில் சாதனையாக கடைப் பிடித்தான் என்றால், அவனாலும் அந்த அதி உன்னத நிலையை அடைந்து, அந்த பரமா(ஆ)ன்மா - வை எங்கும், எதிலும், நீக்கமற உருவமின்றி தன் அறிவுக் கண்களால் எப்பொழுதும் தூய்மையான மனதிலேயே தரிசிக்க முடியும்.



அவ்வாறு, தனக்கு கொடுக்கப்பட்ட மனதின் பரிணா மத்தினால் உண்டான ஆறாவது அறிவின் அதி சூக்ஷ்மத் தன்மையை, அறிந்துக் கொள்ள முடியாத பாமர மனிதன், இறைவனை அறிய விரும்பினால், அவனுக்கு ஒரு

உருவத்தைக் காட்டி, இவ்வாறுதான் இறைவன் இருப்பான் என்று, ஒரு மனித வடிவிலேயே கடவுள் சிலையில் வடித்து, அந்த மனித உடலின் தத்துவங்களையே ஆலயமாக வடிவமைத்து, அந்த ஆலயத்தின் கர்பகிருஹத்தில் இறைவனை (சிவத்தை) பிரதிஷ்டை செய்து வழிபடும் ஒரு வழி முறைதான் இந்தச் சிதம்பர ரகசியத்தில் இருக்கிறது.

இவ்வாறு அகத்தில் உள்ள சிவத்தை, புறத்தில் வழிபடுவதை சிதம்பர ரகசியமாக கோயில் அமைப்பில் சுட்டிக் காட்டப்படுவது என்பது, நம் முன்னோர்கள் அந்த இறைவ(தன்)னை அறிவதில் உள்ள ஆர்வத்தை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

ஆகவே, அதைப் பற்றிய ஒரு ஆழமான கருத்துக் களையே இந்த நூலின் வாயிலாக உங்களுடன் பகிந்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்**



# 1. ஸ்ரீ நடராஜர் தத்துவம்

நடராஜர் ஸ்தோத்திரம்

ஸத்யம் ஞான மனந்த மேகமமலம்
விஞ்ஞான மானந்தமோம்|
சந்தோகா: ஸமுபாஸதே யமநிசம்
ஹ்ருத்பத்ம மத்யே ஸ்திதம்|
தம் ஸ்ரீதப்ர ஸபாந்தரே ஸஹமஹா
சக்த்யா க்ருபா கௌரவத்|
ந்ருத்யந்தம் நடராஜமாதி புருஷம்
வந்தே துரீயம் சிவம் ||

**பொருள்:-**

எவன் சச்சிதானந்த ஸ்வரூபனும், ஏகனும், கால தேசங்கலற்ற பரிச்சேத மற்றவனும், பிரணவ லக்ஷியார்த்த ஸ்வரூபனும், சாந்தோக்ய உபநிடதத்தில் தகர வித்தையால் உபாஸிக்கப்படுபவனும், ஹ்ருதயக் கமலத்தில் விளங்குபவனும், ஆதிபுருஷனும், துரீய சிவனுமானவனோ, அவனே சிதம்பரமென்னும் மஹா க்ஷேத்திரத்தில் ஹ்ருதய புண்டரீகமாகும் தஹராகாச சபையில், மஹா சக்தியாகும் ஸ்ரீசிவகாமி அம்மை யாரோடு, ஆன்மாக்களிடமுள்ள

கருணையினால், ஆனந்ததாண்டவம் புரிகின்றனர். இத்தகைய ஸ்ரீநடராஜ ஸ்வரூபத்தை நமஸ்கரிக்கின்றேன்.

# 2. சிதம்பரம் ஸ்தல புராணம்

சிதம்பரத்தைப்பற்றி "**சிதம்பர மகாத்மியம்**" என்னும் புத்தகத்தில் முதலில் சிதம்பரம் பற்றியும், கோயில் பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

வேதவியாசரால் எழுதப்பட்ட "**ஸ்கந்த மஹா புராணத்தில்**" உள்ள **"சனத்குமார சம்ஹிதை"** என்ற நூலை ஒட்டியே எழுதப்பட்ட இந்த சிதம்பர ஸ்தலப் புராண புத்தகம் 26 அத்தியாயங்களைக் கொண்டது.

இதில் சிதம்பரத்தைப்பற்றி கூறும் பொழுது, இது **வியாக்ரபாதர்** ஆசிரமமாக இருந்தது என்றும், ஆதிசேஷனின் அவதாரமான **பதஞ்சலி மஹரிஷி** அவர்களின் ஆசிரமமாகவும் இருந்தது என்றும், அத்துடன், அவர் தன்னை அறியும் தலையாய யோகக் கலையை கற்பித்துக் கொண்டிருந்த இடமாக இருந்தது என்றும், அதுமட்டுமின்றி **மாணிக்கவாசகப் பெருமான்**_முக்தி பெற்ற ஸ்தலம் என்றும் அனேக குறிப்புகள் காணப்படுகின்றன.

# 3. புண்டரீகபுர மஹாத்மியம்

**தில்லையைப்பற்றிப் புண்டரீகபுர மஹாத்மியத்தில் கூறுவது:**

12 அத்தியாயங்கள் உள்ள புண்டரீகபுர மஹாத்மியம் இரு பாகங்களைக் கொண்டது. பூர்வபாகம் மற்றும் உத்தரபாகம். பூர்வபாகம் என 9 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. முழுதும் கிரந்த எழுத்துக்களால் ஆன பதிப்பு.

3 அத்தியாயங்கள் கொண்ட இரண்டாம் பாகம் "**ரகஸ்ய அத்தியாயம்**" என்றும், "**பாரத்வாஜ சம்ஹிதை**" என்றும் சொல்லப்படுகின்றது. இது கையால் எழுதப் பட்டுள்ளது. இதன் முக்கியமான பகுதிகளில், "**யந்திரலட்சணம்**", "**சபாலட்சணம்**", "**மந்திரபுரசாரம்**" பற்றிய வர்ணனைகளும் இடம் பெற்றுள்ளது.

அத்துடன் "**சிவ மஹா புராணம்**" என்ற பகுதியில் "**ஏகாதச ருத்ர சம்ஹிதை**" யை ஒட்டி உள்ள இந்தப் புண்டரீகபுர மஹாத்மியம் என்ற நூலில் உள்ள ஒரு அத்தியாயம் முழுதும், இந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் உள்ள பத்து முக்கியமான தீர்த்தங்களைப்பற்றி கூறப்படுகின்றது.

# 4. திலவன மஹாத்மியம்

ஸ்கந்தபுராணத்தில் உள்ள சனத்குமார சம்ஹிதை என்ற நூலை ஒட்டி எழுதப்பட்ட இந்த நூல், எட்டு அத்தியாயங்கள் கொண்டது. இதில் பெரும்பாலும் "**சிதம்பர ரகஸ்யம்**" பற்றியும், அதன் குறிப்புக்கள் பற்றியும், சிதம்பரத்தில் உள்ள 5 சபைகள் பற்றியும் கூறுகிறது.

# 5. வ்யாக்ரபுர மஹாத்மியம்

இதுவும் ஸ்கந்த புராணத்தில் இருந்து வந்தது. ஆனால் சூத சம்ஹிதையை ஒட்டி எழுதப்பட்டது. 19 அத்தியாயங்களைக் கொண்டது. இதன் முக்கியத்துவம் எல்லாம் வல்ல அந்த ஆடவல்லானுக்கும், அவனுடைய தேவி காளியாய் வந்து போட்டிக்கு அழைத்ததையும், காளியை அவன் வென்றதையும் குறிப்பிடுவதோடு அல்லாமல், ஆடவல்லானின் முக்கியமான ஒன்பது வித ஆடல் தோற்றங்களைப் பற்றியும் விவரிக்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில், கடலூருக்குத் தென்மேற்கே உள்ள சிதம்பரத்தின் எல்லைகளாய் வடக்கே வெள்ளாறும், கிழக்கே வங்கக்கடலும், தெற்கே கொள்ளிடமும், மேற்கே வீராணம் ஏரியும் அமைந்து உள்ளது.

ஆன்மீகத் தத்துவங்களின் படிச் சிதம்பரம் பற்றிக் குறித்திருப்பது என்னவென்றால், இந்த பூமியையும், மனித உடலையும் ஒருங்கிணைத்து பார்த்தவர்கள் நம்முடைய ரிஷி முனிவர்கள் எனலாம்.

மனித உடம்பில் உள்ள "**இட**" நாடியைப் போன்றது, இந்தப் பூவுலகில் உள்ள ஸ்ரீலங்காப் பிரதேசம் என்றும், "**பிங்கள**" நாடியைப் போன்றது நமது பாரதத்தில் உள்ள இமயமலைப் பகுதி என்றும் கூறி, அதுப்போன்று, இந்த மனித

உடலில் "**இட**" நாடிக்கும் "**பிங்கள**" நாடிக்கும் நடுவில் "**சுசுஷ்ம**" நாடி உள்ளதைக் குறிப்பிட்டு, இந்தப் பூவுலகிற்கு மத்தியில் "**சிதம்பரம்**" என்ற திவ்ய ஸ்தலம் அமைந்துள்ளது என்று ஒப்பீடு செய்யப்படுகிறது.

சிதம்பரம் நகரின் மையத்தில் அமைந்துள்ளது இந்த சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோயில் ஆகும்.

இந்தக் கோவிலின் பூர்வீகம் எவ்வளவு பழமை வாய்ந்தது என்று யாராலும் கூற முடியாது.

புராணங்களிலேயும் ஸ்தல மஹாத்மியங்களிலும் குறிப்பிட்டிருப்பதை காணும் போது, சிதம்பர கோயில் தோன்றிய காலத்தை குறிப்பிட முடியவில்லை.

அதுப்போல, மற்றச் சிவன் கோயில்களில் பூஜை வழிபாட்டு முறைகள் "**சைவ ஆகமம்**" முறைப்படித்தான் நடக்கும்.

ஆனால் சிதம்பரம் கோயிலில் தினசரி வழிபாடு வைதீகமுறைப்படி, அந்த சிதம்பரம் கோயிலுக்கு உரிமையாளர்களான தீட்சிதர்களால் மட்டுமே நடை பெறுகின்றது. இந்த வழிபாடு முறை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்பதை அறிய முடியவில்லை.

"**ஆகம வழிபாடு**" என்பது வேதகாலத்திற்கு பிறகு வந்தது. இது பாரதத்தின் எந்த கோயில்களாக இருந்தாலும் இந்த அகம விதியின் படி கட்டி, வழிபாடு செய்யப்படுகின்றது.

இந்த ஆகம வழிபாடுமுறை, கி.பி. இல் வந்தது என்று வரலாற்று சான்றுகளின் வாயிலாக அறிய முடிகின்றது.

ஆனால், சிதம்பரத்தில் இன்றும் நடைமுறையில் உள்ள **வைதீக வழிபாடு** அதற்கு முன்னரே தோன்றியது எனலாம்.

அதாவது பாரதத்தின் வேதகாலத்திற்கு பிறகு தோன்றிய வைதீக மதத்தில் வாழ்ந்த அன்றைய ரிஷிகள் இந்த சிதம்பரம் கோயில் வழிபாட்டு முறையை தங்களது வைதீக மரபுப்படி செய்ய ஆரம்பித்து, அதே முறையை இன்றுவரை நடைமுறையில் கொண்டுள்ளனர் என்றும், சரித்திர ஆதாரங்களின் வாயிலாகவும், கோயிலின் உள்ளே கிடைத்துள்ள சில கல்வெட்டுக்களில் இருந்தும், கோயிலின் பழமையில் இருந்தும் இதை அறிய முடிகின்றது.

சிதம்பரம் முதலில் தில்லை வனங்கள் சூழ்ந்த காடாய் இருந்தது. பல காலத்துக்கு முன்னர் வேத காலத்திலோ, அல்லது அதற்கும் முன்னரோ, எப்போது என்று கூறவே முடியாத தொன்மையான காலத்திலேயே அது தில்லைக் காடாக இருந்தது. "**தில்லை**" என்ற இந்தப் பெயர் மிகப் பழமையான ஒன்று எனப் புராணங்களின் வாயிலாகத் தெரிய வருகிறது. சரித்திர ஆராய்ச்சியாளர்களின் முடிவின் படியும்

இது தில்லை வனங்கள் சூழ்ந்து இருப்பதால் "**தில்லை**" எனப் பெயர் பெற்றதாகக் கூறுகின்றார்கள்.

சரித்திர ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி வேத காலத்தில் **உருவ வழிபாடு இல்லை** எனவும், பின்னால் தோன்றிய வைதீக மதங்களின் வளர்ச்சி, சாதாரண மக்களுக்கு இறை நம்பிக்கையை உண்டாக்கும் பொருட்டு **உருவ வழிபாடு உண்டாக்கப்பட்டது** என்றும் அறிய முடிகின்றது.

அன்றைய காலத்தில் மரங்கள் சூழ்ந்த வனங்களில் ரிஷிகள் தவம் இயற்றி வந்தார்கள். அத்தகைய ரிஷி ஒருவரிடம் வேதம் கற்றுக் கொண்ட சிஷ்யர்கள் மற்றவர்களுக்கும் அதை கற்பித்து வந்த தங்களது பரம்பரைகளின் வாயிலாக, அவர்களுக்குள் ஆத்ம விசாரம் செய்து, தான் அடைந்த ஞானத்தை மற்றவர்களும் அடையும் பொருட்டு, விருப்பமுடன் இவர்களை நாடி வருகின்றவர்களுக்கு உபதேசித்து வந்தனர்.

இவ்வாறு ஆத்ம ஞானத்தை மற்றவர்களுக்கும் உபதேசித்து, இவர்களும் சதா ஆத்ம நிஷ்டையில் நிலைப்பெற்று இருந்தார்கள்.

இத்தகைய ரிஷிகள் தங்களின் வயதான காலத்தில், முதுமையின் காரணமாக, இவர்களது உடலை விட்டு உயிர் பிரிந்துவிட, இவர்களுடன் வாழ்ந்த மற்ற சக ரிஷிகள் தங்களுக்கு வித்தை கற்றுக் கொடுத்த ஆசானின் உடலை, சகல மரியாதையுடன் அடக்கம் செய்ய விரும்பி, அந்த

ரிஷியின் உடலை, ஏதாவது ஒரு மரத்தின் கீழ் புதைத்து விட்டு, அந்த இடத்தை அடையாளப்படுத்தும் விதமாக அதன் மீது ஒரு கல்லை நட்டு அடையாளமாக வைத்து, தங்கள் ஆசானை புதைத்த அந்த அதிர்ஷ்டானத்தை வழிபட்டு வந்தனர்.

இவ்வாறு, உயிரை விட்ட ரிஷிகளின் உடலை அந்த அடர்ந்த காடுகளில் புதைத்த இடத்தை அடையாளம் தெரிய வைக்கப்பட்ட கல்லையே, நாளடைவில் சிவலிங்கமாக மாற்றி வழிபடத் தொடங்கி, பிற்காலங்களில் இதுவே உருவ வழிபாடுகளாகவும் மாறின.

நாளடைவில், சிலர் தங்கள் இஷ்ட தெய்வத்தின் உருவங்களை கல்லிலும், செம்பிலும் உருவங்களாக அமைத்து, அதுப் போன்று மரங்களில் அடியில் வைத்து வழிபட ஆரம்பித்தனர் என்றும், பின்னால் அந்தக் குறிப்பிட்ட மரமே அந்த ஊரின் ஸ்தல விருக்ஷமாக (கோவில் மூலஸ்தான மரமாக) மாறியது என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

அப்படி உண்டானதுதான் மாமரம், காஞ்சியிலும். நாகப்பழமரம், திருவானைக்காவல் என்ற சிவன் கோவிலாகிய திருச்சியிலும். கடம்பமரம், மதுரையிலும். தில்லைமரம், சிதம்பரத்திலும் உள்ளது என்று அறிய முடிகின்றது.

இந்தச் சிதம்பம் கோயிலில் நடராஜர் வரும் முன்பே வியாக்ரம பாதர் ஆசிரமமும், பதஞ்சலி முனிவரின்

ஆசிரமமும் இருந்து வந்ததாகவும், அவர்கள் உருவமற்ற பரமாத்மாவான சிவனைக் குறித்துத் தவம் செய்து வந்தார்கள் என்றும் தெரிய வருகின்றது.

# 6. சிதம்பர கோயிலின் ஆலய அமைப்பு

பரசிவம் எங்கும், எதிலும் வியாபித்து இருந்தாலும், இந்த பூ உலகில் பல்வேறு ஆலயங்களில் விஷேசமாக, உருவத்தில் விளங்குகின்றது என்பது வேத ஆகமங்களில் வாயிலாக அறிய முடிகின்றது.

தேகமே கோயில், தேகத்தின் அமைப்பைப் போலவே கோயில்களின் அமைப்பும் இருக்க வேண்டும் என்றும் சிற்ப சாஸ்திரங்கள் கூறுகின்றது.

மனிதன் ஒவ்வொருவனும் தன் சரீரத்திற்குள் இதயக்குகையில் அஹமுகமாக **(உள்ளே)** பரசிவத்தைக் காணுதல் வேண்டும். இவ்வாறு உள் நோக்கி வழிபட இயலாத மந்த அறிவு கொண்ட மக்களுக்காக, சரீர அமைப்பின் படியே அமைக்கப்பட்ட ஆலயங்களில் பஹிர்முகமாக **(வெளியே)** இறைவனை தரிசித்து வழிபட அன்றைய ஆன்றோர்களால் அமைக்கப் பட்டவைகளே இத்தகைய ஆலயங்கள் ஆகும்.

சிதம்பரம் கோயிலும் இந்த முறையில் அமைக்க பட்டதே ஆகும். யோகசாஸ்திர விற்பன்னரும், ஞானியுமான **ஸ்ரீ பதஞ்சலிமகரிஷி** தேவ சிற்பியான விஸ்வகர்மாவினால் இந்த சிதம்பரம் கோயிலை அமைத்தார் என்று சான்றுகள் உள்ளன.

# 7. சிதம்பர ஆலயத்தின் தத்துவம்

சிதம்பர ஆலயத்தில் ஸ்ரீ நடராஜ மூர்த்தி தக்ஷிண முகமாய் விளங்குவதால் ஒரு யோகியானவர் தன் உடலை வடக்கு தலையும், தெற்கே பாதமும் வைத்து உறங்கினால், அத்தகைய நிலை எவ்வாறு இருக்குமோ, அதுப்போன்று, இந்த ஆலய அமைப்பு ஆகம விதிப்படி அமைக்கப்பட்டுள்ளது.

| ஆலய பாகங்கள் | யோகியின் சரீர பாகங்கள் |
|---|---|
| ஆயிரங்கால் மண்டபம் | ஸஹஸ்ராரம் |
| சிவகங்கை | அமிர்தவாபிகை |
| ஸ்ரீநடராஜமூர்த்திக்கு மார்கழி, ஆனி மாதங்களில் நடக்கும் மஹாபிஷேக மண்டபம் | ஆக்ஞை |
| ஸ்ரீதக்ஷிணா மூர்த்தியும், ஜ்யோதிர்லிங்கமும் எழுந்தருளியுள்ள ஸ்தானம் | விசுக்தி |
| திருச்சிற்றம்பலம் | அநாஹதம் (ஹ்ருதயம்). |

இதில், பிரஹ்மா, விஷ்ணு, ருத்திர, மகேஸ்வர, சதாசிவ பீடங்களும் உள்ளன. பஞ்சாக்ஷரப்படிகளும் உள்ளன. இவ்வாலயம் தரை மட்டத்தை விட உயர்ந்தது. நான்கு

பக்கங்களிலும் வாசல்களுடன் கூடிய கதவுகளை கொண்டதாய் அமைந்திருக்கின்றது. இந்தக் கதவுகளே அஞ்ஞானமென்னும் மறைப்பாகும்.

96 தத்துவங்களும் ஜன்னல்களாகும். இத்துடன் நடுவேயுள்ள நான்கு கம்பங்கள் நான்கு வேதங்கள். சுற்றிலுமுள்ள 28 மரத்தூண்கள் காமிகாதி என்ற இருபத்தெட்டு ஆகமங்கள், தரைமட்டத்திற்கு மேல் உயர்ந்து இருக்கின்ற அம்பலம் (கோவில்) விளங்கும் பிரதேசம் சுத்த வித்தையாகும்.

ஜகன்மாதா ஸ்ரீ சிவகாமி அம்மையாரும், ஆனந்த தாண்டவம் புரியும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியும் எழுந்தருளியுள்ள ஸ்தானமும், சிதாகாசமாகிய ரஹஸ்ய ஸ்தானமும் சிவ, சக்திப் பிரணவப் பீடமாகும்.

ஸ்தூல ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு சூக்ஷும ஸ்வரூபம் ஒன்று உண்டு. அதுதான் இரத்தின சபாபதி யாகும். ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு ஒரு அவ்வியக்த வடிவமும் உண்டு. இதுதான் ஸ்படிகலிங்கம். இந்த மூன்று ஸ்வரூபங்களுக்கும் பிரதி தினமும், ஆறு காலங்களிலும் விஷேச ஆராதனைகள் நடக்கின்றன.

ஸ்வயம் பிரகாசமாய், வெட்டவெளியாய் விளங்கும் சிதாகாசத்தை **ரஹஸ்யம்** என்று கூற வேண்டுமாயின், அதற்கு ஒரு மறைப்பு இருத்தல் வேண்டும்.

இந்த மறைப்புத் திரையின் முற்பகுதி கருப்பு நிறமாகவும், பிற்பகுதி சிகப்பு நிறமாகவும் அமைந்து உள்ள காரணத்தால், அவித்தையே (அறியாமையே) “**மாயை**” ஆகவும், அறிவே “**சித்**” சக்தியாகவும் விளங்கும் தன்மை உணரப்படுகின்றது.

இந்த திரைக்குப்பின்னால் ஒளிர்வது செம்பொன் மயமான வில்வ ஹாரம் ஆகும்.

இந்த வில்வ ஹாரத்தை மூன்று இலைகளை உடைய வில்வத்துடன் ஒப்பிடுவதற்கு காரணம், சுத்தத் திரிபுடியைக் காட்டுகின்றது.

**ஹம்ஸ:, ஸோஹம்** என்ற **அஜபா மந்திரம்** சுத்தத் திரிபுடி எனப்படுவதால், அதற்குக் கீழ் விளங்குவது சிவசக்தி ஐக்கிய பரப்பிரம்மஸ்வரூபம் ஆகும். இந்த நிலையை உணர்த்துவது, அந்த **சிவசக்தி_சம்மேளன யந்திரமாகும்.**

இதற்கும் பிரதி தினம் ரஹஸ்ய பூசை நடந்து வருகின்றது. இதனை ஆராதிக்கும் முறை ஸ்ரீ பதஞ்சலி மகரிஷியினால் அருளப்பட்டு, தீக்ஷிதர்களால் மிகவும் ரகசியமாகப் போற்றப்படுகின்றது.

ஞானம் எனும் சக்தியை **மாயை** (அறியாமை) எனும் **திரை** மூடியிருக்கிறது. எவருக்கு மனம் ஒருமுகப்பட்டு, மலங்களற்ற மனத்தூய்மையினால் மாயையை (அறியாமையை) விலக்கிப்பார்க்க முடிகிறதோ, அவருக்கு “**ஞானம்**” எனும்

தெளிவு பிரகாசித்து, எல்லையற்ற அந்த வெட்டவெளியை எதிலும் அறியும் அகண்ட அறிவு உண்டாவதை உணர முடியும் என்பதே இந்த சிதம்பர ரகசியத்தின் தத்துவம் ஆகும். இதுவே, **சிதம்பர இரகசியம்!** ஆகும்.

மனிதரின் உடல் அமைப்பில், இந்தச் சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. மனித உடலில் **அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம்** என ஐந்து கோசங்கள் ஆகிய ஐந்து நிலைகள் உள்ளன. கோசங்கள் என்றால் மூடப்பட்ட மறைப்பு என்று பொருள்.

இந்த ஐந்து கோசங்களால் ஆன மறைப்புதான் பரமா(ஆ)ன்மாவை அறிய முடியாமல், சரீரத்தை முன் நிறுத்தி மனிதனை மயக்குகின்றது.

அந்த ஐந்து கோசங்களை தாண்டி, மனித உடலின் மையப் புள்ளியாகிய ஹிருதயத்தில் சிதாகாசத்தில் ஆன்மாவாக இறைவன் வீற்றிருக் கின்றானோ, அவ்வாறே, இந்த உலகின் மையப் புள்ளியாக சிதம்பரத்தில் அமைந்திருப்பதுதான் ஆடல் வல்லான் தில்லை அம்பலத்தானின் திருச்சந்நிதி.

ஐந்து கோசங்களும், இந்த கோவிலுக்கு ஐந்து பிராகாரங்களாக இங்கே அமைந்துள்ளன. இந்தக் கோயில்

மட்டுமல்லாது, மற்ற சிவ ஸ்தலங்களையும் கணக்கிட்டுப் பார்த்தாலும் ஐந்து சபைகள் உண்டு.

அதாவது திருவாலங்காடு - ரத்னசபை, சிதம்பரம் - கனகசபை, மதுரை - ரஜத (வெள்ளி) சபை, திருநெல்வேலி - தாமிர சபை, திருக்குற்றாலம் - சித்திர சபை.

இங்கே, தில்லையில் உள்ள கனக சபையில், 21 ஆயிரத்து 600 தங்க ஓடுகள் வேயப்பட்டுள்ளன. அதென்ன கணக்கு என்கிறீர்களா? நாம் ஒருநாளில், 21 ஆயிரத்து 600 முறை மூச்சை இழுத்து வெளியே விடுகிறோம். அதைக் குறிக்கவே இத்தனை தங்க ஓடுகள்!

நம் உடலில், மொத்தம் 72 ஆயிரம் நாடிகள் (நரம்புகள்) உள்ளன. இவைதான் இணைந்தும் பிணைந்தும் நம்மை இயக்குகின்றன. நம் உடலில் பித்தம், வாதம், சிலேத்துமம் (கபம்) சீராக இருப்பதற்கு, தலைமுடியில் இருந்து குதிகால் வரை சீராக இயங்குவதற்கு நாடி நரம்புகள் அவசியம்.

அதைக் குறிக்கும் வகையில் இங்கே, பொன்னம் பலத்தானின் சபையில் 72 ஆயிரம் தங்க ஆணிகளைக் கொண்டு கூறைகள் இணைக்கப்பட்டுள்ளன.

நம் உடம்பில் நடுநாயகமாக இருப்பது இதயம். அதாவது சபாநாயகம் என்ற இறை சக்தி.

நான்கு வேதங்களும், ஆறு சாஸ்திரங்களும் இதயத்தைச் சுற்றியிருக்கும் உபகரணங்கள் போல, ஸ்வாமி சந்நிதியைச் சுற்றிலும் பத்து தூண்களாகத் திகழ்கின்றன.

அதன்பிறகு உள்ள ஐந்து தூண்கள் பஞ்ச பூதங்களைக் குறிக்கின்றன. 18 புராணங்கள் 18 தூண் களாகவும், 28 ஆகமங்கள் மேலே உள்ள உத்தரங் களாகவும், 36 தத்துவங்கள் மேலே நடுநடுவே வருகிற சட்டங்களாகவும், 64 கலைகள் மேலே அனைத்தையும் தாங்குகிற மரங்களாகவும், 96 தத்துவங்கள், ஜன்னல்களில் உள்ள 96 துளைகளாகவும் அமைக்கப் பட்டுள்ளன.

சதா சர்வ காலமும் இறைவன் ஆனந்த நடனம் புரிந்துக் கொண்டிருக்கிறார். அந்த ஆனந்த நடனம் என்பது நம் தேகத்தில் நடக்கின்ற பிராண சுவாசமே மனதின் ஸ்தூல வடிவம் என்பதினால், கண்களுக்கு புலனாகாத சூக்ஷும மனம் அந்த அறிவின் ஆட்டத்தை உணர்ந்துக் கொள்வதே புறத்தில் ஜெபிக்கப்படாத “**அஜபா ஜெபம்**” என்பதாகும்.

அந்த அதி அற்புத ஆனந்த நடனத்தை உள்ளத்தில் உணர்கின்ற மனமே, தன்னை அந்த அறிவாக அறிந்து அமைதி அடைகிறது.

அதுவே, மற்ற அறியாமை மனங்களெல்லாம் அஹங்காரத்தினால், இதை ‘**நான் செய்கிறேன்**’, ‘**நான் பார்க்கிறேன்**’, ‘**நான் கேட்கிறேன்**’ என்று ஆர்ப்பாட்டத்தில் ஆடிக்கொண்டிருக்கிறது.

பதஞ்சலி மஹரிஷி அருளிய ‘**யோக சூத்திரம்**’, இந்த ஆனந்த நடனத்தைத்தான் வலியுறுத்துகிறது.

## 8. சிதாகாசம் – தத்துவாதீத ஸ்வரூபம்

கனக சபை - சர்வ தத்துவாத்மக வடிவம் மனதிற்கும், வாக்கிற்கும் எட்டாத தத்துவாதீத ஸ்வரூபமாயிருப்பதால், சித்சபையை **இரகஸ்யம்** என்று ஆன்றோர்கள் கூறுகின்றனர்.

சபை, அம்பரம், அம்பலம் என்பன ஒரு பொருட் சொற்கள் ஆகும்.

சிதம்பர இரகசியமென்னும் விசயத்தை தத்து வார்த்தமாக விசாரித்து அறிவோமாயின், அகண்டாகார விருத்தியில் பிரதிபலித்த சித்தே சிதம்பரமென்னும் சிதாகாசமென்றும், அகண்டாகார விருத்தியே பொற் சபையென்றும் நன்கு புலனாகின்றன.

அதாவது, பரப்பிரம்மமே தன்னை, மனிதனின் மனதின் வாயிலாக பிரதி பிம்பித்துக் கொள்ளும் பொழுது, "**சிதாபாஸன்**" (போலி அறிவு) ஆகின்றது.

'**சித்**' என்றால், "**அறிவு**" என்றும், '**ஆபாசன்**' என்றால் "**போலி**" என்றும் அழைக்கப்படுவதினால், மனம் என்ற ஒன்று போலி அறிவாக மாறி, பல்வேறு வெளி விசயங்களை எண்ணங்களாக ஏற்றி வைத்துக் கொண்டு, அந்த உண்மைப் பரம் பொருளை அறிய தடையாக இருக்கின்றது.

# 9. ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் கோலம்

பிரஹ்மபுரமாகிய சிதம்பரத்தில் (சிதாகாசத்தில்) கண்ணுதற் பெருமான் ஸ்ரீ நடராஜர் கோலத்தில் எழுந்தாடுவது என்பது, "**அப்பெருமான் அசைந்தாலன்றி அணுவும் அசையது, அப்பெருமான் ஆட உயிருள்ள பொருட்கள், உயிரற்ற பொருட்களென்று அனைத்தும் மிரண்டாடுகின்றன**" என்பதை விளக்குகின்ற ஒரு ஆன்ம தத்துவமாகும்.

இந்த ஸ்ரீநடராஜ கோலம் "**உயிர்கட்கு இயல்பாகவே எந்த ஒரு சுதந்திரமும் கிடையாது, சிவத்தின் (ஆன்மாவின்) சன்னிதான விசேஷத்தால், அவைகள் சுதந்திரம் உடையன போன்று காணப்படுகின்றன**" என்ற மிகப் பெரிய ரகசியத்தை குறிப்பிடுகின்றது.

அதைத்தான் மணிவாசகப் பெருமான், "**என் செயலாவது ஒன்றுமில்லை, எல்லாம் அவன் செயலே**" என்று பாடுகிறார்.

இதன் உண்மைப் பொருள் என்னவெனில், மனம் தனித்து இயங்க முடியாது, அது ஆன்மாவின் (அறிவின்) பிரதிபிம்ப பிரகாசம் என்பதினால், இந்த மனதின் வாயிலாக அறிகின்ற அனைத்துமே அந்த அறிவுப் பிரகாசத்தின் வெளிப்பாடுதான் என்பதை ஏற்பதே இங்கு ஏகத்துவம் என்ற '**அத்வைதம்**' ஆகும்.

# 10. ஸ்ரீ நடராஜ மூர்த்தியே பஞ்சாக்ஷர வடிவம்

ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவடி "**ந**" காரமாகவும், திருவுந்தி "**ம**" காரமாகவும், திருத்தோள் "**சி**" காரமாகவும், திருமுகம் "**வ**" காரமாகவும், திருமுடி "**ய**" காரமாகவும் கொண்டு, ஹிருதய குகையில் **தகராகாசம்** என்னும் சிதம்பரத்தில் "**நமசிவய**" என்று ஆனந்தத் தாண்டவம் புரிதலை எவன் ஒருவன் தக்க சத்குருவின் மூலமாகத் தெரிந்துக் கொண்டு சந்தேகம் நீங்கி, அந்நடனத்தின் உண்மையை விசாரித்து, ஆய்ந்து அறிகின்றானோ, அவனுக்கே இனிப் **பிறவா பெருநிலை** உண்டாகும் என்பது இதன் ரகசியம் ஆகும்.

ஆகாயமானது, **பூத ஆகாயம்** என்றும், **மன ஆகாயம்** என்றும், **சித் ஆகாயம்** என்று மூன்று வகைப்படும்.

இந்த மூன்று ஆகாயங்களிலும் சத்சிதானந்தப் பரம்பொருள் இருந்துக் கொண்டு, அதாவது, "**சத்**" என்றால் '**இருப்பு**' என்றும், "**சித்**" என்றால் '**அறிவு**' என்றும், "**ஆனந்தம்**" என்பது '**உணர்வு**' என்றும், ஆகிய அந்த "**சத்சிதானந்தம்**" சர்வ ஜீவர்களுக்கும் **இம்மை, மறுமை** மற்றும் **வீடுபேறு** என்ற மூன்றையும் அருளி, அந்த உயிர்களை உன்னத நிலைக்கு உயர்த்துகிறார் என்பது வேத ஆகமங்களின் சித்தாந்தமாகும்.

இதில் **பூத ஆகாய நடன சேவையானது**, ஜீவர்கள் ஆங்காங்கு உள்ள சிவ ஸ்தலங்களுக்குச் சென்று, ஆகம விதிப்படி ஸ்ரீ நடராஜப் பெருமானது திருக்கூத்தை தரிசித்தலாகும்.

**மன ஆகாய நடன சேவையானது** பஞ்சாக்ஷர வடிவமாக விளங்கும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியை மனதினால் நன்கு தியானித்தலாகும். இது ஒருமுகப்பட்ட தூய்மையான மனதிற்கே சாத்தியமாகும். இந்த பஞ்ச அக்ஷரமே **சகளம், சகளநிஷ்களம், நிஷ்களம்** ஆகிய மூன்று வகை மூர்த்தங்களுக்கு திருமேனியாகும்.

சித் ஆகாய (சிதாகாச) நடன சேவையானது "**பஞ்சாக்ஷரத்தின் லக்ஷியார்த்தமாகிய சிவமே நான்**" என்று '**சோஹம்**' பாவனை செய்வதாகும். இதுவே, "**சிவயோகம்**" எனப்படும்.

பூதாகாச நடன சேவையில் இம்மைப்பயனும், மனாகாச நடன சேவையில் மறுமைப்பயனும், சிதாகாச நடன சேவையில் வீடுபேறும் சித்திக்கின்றன.

இதில், **இம்மை** என்பது, இந்த உலகத்தை இன்பமாக அனுபவித்து வாழ்கின்ற வாழ்க்கையையும், **மறுமை** என்பது மீண்டும் பிறவிக்கு வந்து, எதாவது ஒரு உடலில் சுக, போகங்களை அனுபவித்து, வாழ்கின்ற வாழ்க்கையையும் குறிக்கிறது. இதில் **வீடுபேறு** என்பது, இனி **பிறவா பெருநிலையை** அடைவதை குறிப்பிடுகின்றது.

# 11. ஆனந்த தாண்டவத்தின் தத்துவம்

ஒவ்வொரு ஜீவனும் இந்த மாயை என்னும் மயக்கத்தில் கட்டுண்டு கர்ம பந்தத்தினால், சுக, துக்கங்களில் உழல்கின்றனர். இவர்கள் தங்களுக்கு இயல்பாக உள்ள **சச்சிதானந்த** நிலையை அறிய பரசிவத்தின் ஆனந்த தாண்டவ தரிசனமே மிகச் சிறந்த சாதனமாகும்.

ஈஸ்வரனது ஐந்து தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், மற்றும் அருளல் ஆகிய இந்த ஐந்தும் அவரது நடனமேயாகும்.

இந்த திருநடனத்தை தன் உள்ளத்தில் உணர்ந்த உத்தமனுக்கே "**தன் செயலாவது ஒன்றுமில்லை, எல்லாம் அவன் செயலே**" என்ற திடமுண்டாகி சுகம் – துக்கம், இலாபம் – நஷ்டம், வெற்றி – தோல்வி, நன்மை – தீமை போன்ற இருமைகளில் சிக்காமல், சித்தம் தெளிந்த சித்தனாக சாந்த நிலையில் இருக்க முடியும்.

ஆகவே, பஞ்ச கிருத்தியங்களான ஈஸ்வரனின் ஐந்து தொழில்களை விசாரித்து, அதன் தத்துவங்களை அறிவது என்பது, ஆறறிவு (பகுத்தறிவு) படைத்த ஒவ்வொரு மனிதனின் மகத்தான பணியாகும். அதுவே, இந்த மனிதப்பிறவி எடுத்ததின் மகத்துவ மாகும்.

# 12. பஞ்ச கிருத்திய தத்துவம்

சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்கிரஹம் என்ற படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் போன்ற ஐந்து தொழில்களை இறைவன் இயற்றுகின்றான்.

இவைகள் பரசிவத்தின் தாண்டவ ஸ்வரூபம் ஆகும். தாண்டமென்பது ஒருவகை கூத்து. இது அசைந்து ஆடுகின்ற செயல் ஆகும். இது பரசிவத்தின் அபின்னா சக்தியான சிற்சக்தியின் வியாபகத்தால் அன்றி இயங்காது.

அதாவது, ஸ்ரீநடராஜ மூர்த்தி, ஸ்ரீசிவகாமி அம்மையாரைக்கொண்டு ஆடுகின்ற திருநடனம் என்று எடுத்துக் காட்டுவது, இந்த மனம், அந்த அறிவின் வாயிலாக ஆடும் ஆட்டத்தை கூறப்படுவதாகும்.

இதனை ஸ்ரீ சங்கரபகவத் பாதரும்,

“சிவமெனும் பொருளுமாதி சத்தியொடு
சேரினெத் தொழுலும் வல்லதா
மிவள் பிரிந்திடி நியங்குதற் குமரி
தறிதெனா மறை யிரைக்குமா
வைபெரும் புவன மெவ்வகைத் தொழி
னடத்தி யாவரும் வழுத்துதா

ளவனியின்க ணொரு தவமிலார் பணிய
லாவதோ பரவலாவதோ.” - சௌந்தர்யலஹரி.

இந்த சிவாபின்ன சித் சக்தியே, தான் செய்கின்ற தொழிலுக்கு ஏற்றவாறு “**பராசக்தி**” என்றும், “**ஆதிசக்தி**” என்றும், “**இச்சாசக்தி**” என்றும், “**ஞானசக்தி**” என்றும், “**கிரியாசக்தி**” என்றும் ஐந்து வகையான தொழில்களைப் புரிவதாக கூறப்படும்.

“பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானங் கிரியைபர போக ரூபந்த்
தருங்கருணை யுருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்க டாங்க
விரிந்தவுபா தானங்கண் மேவி யொன்றால்
விமலமா யைந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்
தரந்தை கெடமணிமன்று ளாடல் காணு
மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்”

என்று உமாபதி சிவம் தமது **சிவப்பிரகாசத்தில்** அருளியுள்ளார்.

| | |
|---|---|
| பராசக்தி | பரசிவம் போல எங்கும் வியாபித்து, பக்குவமான ஜீவர்களுக்கு அனுக்கிரஹம் செய்வது. |
| ஆதிசக்தி | இது ஜீவர்களுக்கு தங்களுடைய உண்மை ஸ்வரூபத்தை மறைத்து, "நான்" என்ற அஹங்காரத்தை கொடுத்து, அதன் வாயிலாக அதிக இன்னல்களைச் சந்தித்து பக்குவம் ஆகின்றவாறு போகத்தைக் கொடுப்பதாகும். |
| இச்சாசக்தி | இது உயிர்களுக்கு ஆணவம், கன்மம், மாயை போன்ற மலங்களை நீக்கிச் சிவானுபவம் உண்டாகும் பொருட்டு கருணை வடிவம் கொண்டதாகும். |
| ஞானசக்தி | இது உயிர்களைக் காத்து, சிவானுபத்தைப் பெற ஜீவர்களுக்கு உபாயங்களைக் காட்டிக் கொடுக்கின்றதாகும். |
| கிரியாசக்தி | ஜீவர்கள் தாங்கள் செய்த கர்மங்களை சுக, துக்கங்களாக அனுபவித்து தீர்க்க உடலையும், உலக போகங்களையும் உண்டாக்கும் சக்தியாகும். |

இதுப்போன்று சத்சிதானந்த ஸ்வரூப இலக்ஷண முடைய பரசிவம் **நிஷ்களம், நிஷ்களசகளம், சகளம்** என்ற மூன்று திருமேனியைக் கொண்டு **ஐந்து சக்திகளோடு** சேர்ந்து தொழில் செய்கின்றனர்.

| | |
|---|---|
| நிஷ்களம் | அருவத்திருமேனி |
| நிஷ்களசகளம் | அருவுருவத்திருமேனி |
| சகளம் | உருவத்திருமேனி |

இவ்வாறு, சிதம்பரப்பதியான ஸ்ரீநடராஜ மூர்த்தி பெருமான் ஐந்தொழிலையும் செய்தாலும், அதனால் அவர் பாதிப்படைவது இல்லை.

இது எவ்வாறு எனில், ஒரு தாமரை மலரானது மொட்டாக இருந்து, சூரியனைக் கண்டதும் மலர்ந்து, அதன்பிறகு வெப்ப த்தால் வாடி உலர்ந்து விடுவதற்கு காரணமாக சூரியன் இருந்தாலும், இதனால், சூரியனுக்கு எந்தவிதமான பாதிப்பும் உண்டாவதில்லை.

அதுப்போன்று, **படைத்தல், காத்தல், அழித்தல்** ஆகிய முத்தொழிலைச் செய்கின்ற சிவம் இந்த தொழில்களின் நிமித்தம் பாதிப்படைவதில்லை.

## 13. பஞ்சாக்ஷர ரகசியம்

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே."– திருஞான சம்பந்தர்.

பஞ்ச அக்ஷரங்கள் என்ற **பஞ்சாக்ஷரம்** ஐந்து எழுத்துக்களைக் கொண்ட ஒரு மஹா மந்திரமாகும்.

இதனை குரு முகமாக அறிந்துக் கொண்டு மனனஞ் செய்பவனைச் சகல துன்பங்களினின்றும் காத்து இரக்ஷிக்கும்.

இது சப்த கோடி மஹா மந்திரங்களினும் சிறந்து விளங்கக்கூடிய உன்னதமான மஹா மந்திரமாகும். யஜுர் வேதத்தின் காண்டங்களின் ஏழுனுள் நடுக் காண்டத்தின் நடுவே "**ஸ்ரீருத்ரம்**" உள்ளது.

ஸ்ரீருத்ரம் என்பது, "**ருத்ரோபநிடதம்**" என்றும் "**சதருத்ரீயம்**" என்றும் சிறப்புப் பெயர் வாய்ந்தது.

வாழ்க்கை எனும் துயரக்கடலிருந்து ஒருவனை விடுவித்து, விடுதலைக்கு (முக்திக்கு) கருவியானதால், இதனை "**உபநிடதம்**" என்று கூறப்படுகிறது.

நூற்றுக்கணக்கான வடிவங்களில் ஸ்ரீ ருத்திரனை இந்நூலில் போற்றப்படுவதாலும் இதனை "**சதருத்ரீயம்**" எனப்படுகிறது. இந்த சத ருத்ரீயத்தின் மத்தியில் நாயகத் தன்மையோடு எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருப்பதே "**நமசிவாய**" என்ற **சிவ பஞ்சாக்ஷரம்** ஆகும்.

"மும்மறையு ணடுமறையின் முனிவிலெழு காண்டத்துட்
செம்மைதரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையி
லம்மநடுச் சங்கிதையி னாதியீறொ ழித்துநடுப்
பெம்மலுற வுயர்மனுவின் பொருளாவா னெவன்மைந்த"

என்ற ஆன்றோர் வாக்கால் அறியப்படுவதை உணர்க.

வேத புருஷனாகிய பரமேஸ்வரனுக்கு **யஜுர் வேதம்** சிரசாகவும், அதன் நடுவே **ஸ்ரீருத்ரம்** முகமாகவும், அந்த ஸ்ரீருத்ரத்தின் மத்தியிலே உள்ள **பஞ்சாக்ஷரம்** கண்ணாகவும், அந்த பஞ்சாக்ஷர அக்ஷரங் களின் நடுவே உள்ள "**சிவ**" என்பது கண்மணியாகவும் அமைந்து விளங்குகின்றன.

இதுதான் "**உத்திராக்ஷம்**" எனப்படும்.

இத்தகைய மஹிமை வாய்ந்த பஞ்சாக்ஷரத்தை எவன் ஒருவன் பக்தி விசுவாசத்துடன் ஜெபிக்கின் றானோ, அவன் பிறப்பென்னும் பெரு வியாதியில் இருந்து நீங்கி, பிறவாப்பெரு நிலையை அடைவான் என்பது வேத ஆகமப் பிரசித்தியாகும்.

இத்தகைய பஞ்சாக்ஷர வடிவமே ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் ஸ்வரூபம் என்றும் கூறப்பட்டது. ஆதலால், பஞ்சாக்ஷர மந்திரமே பரசிவத்தின் நாம ரூபமாகும்.

"சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கெனவா விசுகரம்
ஆர்க்கும் யகரமபயகரம் - பார்க்கிலிறைக்
கங்கிநகர மடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்."

இதிலிருந்து, சிதம்பரம் ஸ்ரீ நடராஜ மூர்த்தி "**பஞ்சாக்ஷரம்**" ஆக இருக்கின்றார் என்பது தெரிகிறது.

பஞ்சாக்ஷரத்தின் **நகார, மகார, சிகார, வகார, யகார** - ங்களாகிய ஐந்து எழுத்துக்களையும், **ஆகாயம், வாயு, அக்னி, நிர், நிலம்** என்னும் பஞ்ச பூதங்களாகக் கொண்டு தத்துவம் பின்வருமாறு விளக்குகிறது.

அந்த வகையிலே, **கேட்டல், உணர்தல், பார்த்தல், ருசித்தல், நுகர்தல்** என்ற தேகத்தின் ஐம்புலன்களும், அதற்கு உண்டான சக்தியை கொடுக்கின்ற பஞ்ச தன்மாத்திரை களையும், வாயினால் பேசுதல், கால் களினால் நடத்தல், கைகளினால் செயல் செய்தல், ஆசன வாயிலினால் மலம் கழித்தல், இனப்பெருக்க உறுப்பின் மூலமாக சிறுநீர், மற்றும் விந்து வெளிப்படல் என ஐந்து காரியங்களை இந்த மனித சரீரத்தின் வாயிலாக செய்யப்படுகின்ற ஐந்தும் "**கர்மேந்திரியங்கள்**" எனப்படுகிறது.

அவ்வாறே, காது, தோல், கண், வாய், மூக்கு என்ற ஐந்தும் “**ஞானேந்திரியங்கள்**” எனப்படுகிறது.

மற்றும் மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் மற்றும் **உள்ளம்** என்ற ஐந்தும் “**அந்தக்கரணங்கள்**” எனப்படுகிறது.

இத்துடன் நிவர்த்தி, பிரதிஷ்டை, வித்யை, சாந்தி, சாந்தியதீதை என்பதை “**ஐந்து கலைகள்**” எனப்படுகிறது.

கன்ம சாதாக்கியம், கர்த்துரு சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், சிவ சாதாக்கியம் என்ற “**ஐந்து சாதாக்கியங்கள்**” எனப்படுகின்றது.

பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்ற “**ஐந்து சக்திகள்**” எனப்படுகின்றது.

ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் “**ஐந்து பிரம்மாக்கள்**” எனப் படுகின்றது.

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் “**ஐந்து கர்த்தாக்கள்**” எனப்படுகின்றது.

மேலும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் “**ஐந்து தொழில்கள்**” எனப்படுகின்றது.

அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்னும் ஐந்தும் “**வர்ணங்கள்**” எனப்படுகின்றது.

தமக்குள் இவ்வாறு, அனைத்தையும் ஐந்து பூதங்களாக கொண்டு, சப்த (ஒலி) நிஷ்டமாகிய பிரபஞ்சத்திற்கு ஆதாரமாக இந்த **மனித தேகம்** விளங்கிக் கொண்டிருக்கின்றன.

# 14. பஞ்சாக்ஷரத்தின் வகைகள்

ஜீவான்மாக்களின் அதிகாரத்திற்கு தக்கவாறும், அவரவர்கள் உத்தேசிக்கும் பயனுக்குத் தக்கவாறும் இப் பஞ்சாக்ஷரமே பல வகைகளில் பல்வேறு குருமார்களால் உபதேசிக்கப்படுகின்றன.

இந்த பஞ்சாக்ஷரத்தோடு "**ஓம்**" என்ற பிரணவம் சேர்க்கின்ற பொழுது, அது "**ஷடாக்ஷரம்**" எனப்படும்.

"**ஓம் நமசிவாய**" என்பது **ஷடாக்ஷரம்.** அதாவது, ஆறு அக்ஷரங்களை கொண்டது என்பது இதன் பொருள். இந்த **ஷடாக்ஷரம்** பற்றி "**சூதசம்ஹிதை**" என்ற நூலில் மிகவும் பிரசித்தமாக கூறப்பட்டுள்ளது.

"பிரண்வ மெழுகா யதன்பினர் நகாரம்
பேசிடு மதன்பினர் மகாரம்
வரமுறு மதன்பின் சிகாரமற் றதன்பின்
வயங்கிடு வகர வாகார
மூரவுறு மதன்பின் யகாரஞ் சாபால
வுபநிடதஞ் சொலு மிவ்வா
றரவணி சடையாற் கன்பர்காண் முறையி
னறிகளிச் சடக்கர மனுவை." - *சூதசங்ஹிதை.*

இந்த பஞ்சாக்ஷரம் **ஸ்தூலம், சூக்ஷமம், காரணம், மகாகாரணம், மகாமனு** என்று ஐந்து வகைப்படும். அவையாவன,

1. ஸ்தூல பஞ்சாக்ஷரம் – ந ம சி வ ய
2. சூக்ஷும பஞ்சாக்ஷரம் – சி வா ய ந ம
3. காரண பஞ்சாக்ஷரம் – சி வ ய சி வ
4. மஹா காரண பஞ்சாக்ஷரம் – சி வ
5. மஹாமனு – சி

இதில், சூக்ஷும பஞ்சாக்ஷரமாகிய "**சிவாயநம**" என்பதை **ஒருதலை மாணிக்கம்** என்றும், **காரண பஞ்சாக்ஷரம்** ஆகிய "**சிவயசிவ**" என்பதை **இரு தலை மாணிக்கம்** என்றும், மஹாமனுவாகிய "**சி**" என்பதை **நாயோட்டி மந்திரம்** என்றும், **முக்தி பஞ்சாக்ஷரம்** என்றும் பரிபாஷையில் ஆன்றோர்கள் கூறுவார்கள்.

இவற்றில் ஸ்தூல பஞ்சாக்ஷரமாகிய "**ந ம சி வ ய**" என்பது பக்குவப்பட்ட ஜீவான்மாக்களுக்கு இம்மை, மறுமைகளை கொடுப்பதாகும்.

இதனால், இகலோகத்திலும், பரலோகத்திலும் சந்தோசமாக வாழமுடியும்.

இதில் **சிவ** முதலாகி, அழகு பொருந்திய **(சி, வா, ய, ந, ம)** பஞ்சாக்ஷரம் ஐந்தும், இடைவிடாது உச்சரிக்கின்றவர்களுக்கு ஆணவமலம் நீங்கி, சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கப்பெற்று, பேரானந்தத்தில் திளைப்பார்கள் என்று ஆன்றோர்கள் கூறுகின்றார்கள்.

இதில், "**ந ம** சி **வ ய**" என்ற ஸ்தூல பஞ்சாக்ஷரத்தை **பந்த பஞ்சாக்ஷரம்** என்றும், இத்துடன் சூக்ஷூம பஞ்சாக்ஷரத்தை (சி, வா, ய, ந, ம) பிறப்பாகிய பெருநோயை நீக்கவல்ல மந்திரமென்றும் ஆகமங்களில் காணப்படுகின்றது.

நம: பதம் தத்கலு ஜீவவாசீ, சிவ: பதம் தத்பரமாத்ம வாசீ |
ஆயேதிதாதாத்ம்யமிதம் ப்ரஸித்தம், நமக்ஷிவாயேதி ஜகாதமந்த்ர: ||

**நம:** என்ற பதம் ஜீவாத்மாவையும், **சிவ:** என்ற பதம் பரமாத்மாவையும், **ஆய** எனும் பதம் இவை இரண்டும் ஐக்கியமான நிலையையும் குறிக்கிறது.

அத்துடன், இந்த "**சிவாயநம**" என்பது, **சாந்தோக்ய உபநிஷதம்** கூறும், முடிந்த முடிவாகிய "**தத்வமஸி**" போன்று, ஜீவ, பிரம்ம ஐக்கியத்தை வலியுறுத்துகிற **மஹா வாக்கியம்** போன்றே, இந்த **பஞ்சாக்ஷரம்** இருப்பதையும் அறிய முடிகின்றது.

# 15. மனித சரீரமே மகத்தான சாதனம்

பரசிவம் எங்கும் வியாபகமாக பரவி இருக்கும் ஸ்தானங்கள் அண்டத்திலும் உண்டு. இந்த மனித பிண்டத்திலும் உண்டு.

அண்டத்தில் விளங்கும் சிவத்தை "**விராட் ஸ்வரூபம்**" என்றும், பிண்டத்தில் விளங்கும் சிவத்தை "**ஆன்ம ஸ்வரூபம்**" என்றும் ஆன்றோர்களால் அழைக்கப்படுகின்றது.

ஒவ்வொரு மனித சரீரத்திற்குள்ளும், அதாவது, கண்ணிற்கு தெரிகின்ற ஸ்தூல சரீரத்திற்குள்ளே பௌதீக இதயத்திற்கு சிறிது வலதுபுறத்தில் நெஞ்சுக்குழி என்று அழைக்கப்படுகின்ற உடலின் மத்தியப்பகுதியில் மிகவும் அற்புதமான **ஆகாசம்** காணப்படுகின்றது.

இதனை **தகராகாசமென்றும்** (சிற்றம்பலம்), **வெட்டவெளி** என்றும், **சிதாகாசம்** என்றும் அழைக்கப் படுகின்ற சிதம்பரத்தில் ஸ்வயம் பிரகாசமாய் இறைவன் எழுந்தருளியிருக்கின்றான் என்ற **சிதம்பர இரகசியத்தை** உபநிடதங்கள் மிகவும் விரிவாக விவரிக்கின்றன.

இதயத்துக்குள் உள்ள சிறிய வெற்றிடம், அதை ஆகாசம் என்று குறிக்கப்படுகிறது (தகராகாசம்) அந்த ஆகாசத்தில் ஈஸ்வரனை உபாஸிக்க வேண்டும் என்கின்றன.

இது, இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. அவைகள், **பேத உபாசனம், அபேத உபாசனம்** எனப்படுகின்றது.

அதாவது, **பேத உபாசனம்** என்பது, இறைவனை தலைவனாகவும், பூஜிக்கின்ற தன்னை தாசனாகவும் பாவித்து, பக்தி செய்து, இந்த பஞ்சாக்ஷரத்தை ஜபிப்பது ஆகும்.

அவ்வாறே**, அபேத உபாசனம்** என்பது, ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டு, தத்துவங்களை அறிந்து, அந்த ஆன்மாவே எங்கும், எதிலும் நிறைந்துள்ளது, அதுவே பரப்பிரம்மம் என்பதை உணர்ந்து, அந்த பிரம்மத்தை தன்னில் தானாய் தன் சொரூபமாகவே அறிந்துக் கொண்டு, இறைவனு(தன)க்கு வேறாக எதுவுமே இல்லை என்று பிரித்துப் பார்க்காமல், 'இருப்பதெல்லாம் இறைவனே' என்ற ஏகத்துவ நிலைக்கு உயர்ந்து, உண்மையான அத்வைத ஞானத்துடன் பஞ்சாக்ஷரத்தை ஜபிப்பது, "அபேத உபாசனம்" எனப்படுகின்றது.

இந்த இரண்டில், **அபேத உபாசனம்** மிக உயர்ந்ததாக கூறப்படுகின்றது. ஏனென்றால், இது பிரம்மத்திற்கு அருகே உபாசிப்பவனை எளிதாக அழைத்துச் செல்கின்றது.

இதில், ஆலம்பனம் தியானிப்பவன் தன்னிடமே தன்னைக் கண்டு, தன்னில் தானாய் இருந்துக் கொண்டு தன்னையே அவன் தியானிக்கின்றான். இதனை **நிர்குண பிரம்ம** (உருவமற்ற - குணங்களற்ற) உபாசனையாக கூறப்படுகின்றது.

ஞான யோக அதிகாரத்துவத்தை வளர்ப்பதற்கு இந்த தியானமானது இங்கு உபதேசிக்கப்படுகின்றது.

இதை இடைவிடாத அப்பியாஸத்தின் (தொடர் பயிற்சியின்) மூலம் வளர்க்க வேண்டும்.

இங்கு ஈஸ்வரனை உபாசன தேவதையாக உபாசிக்கப்படுகிறது. ஈஸ்வரனுக்கு எட்டு வகையான குணங்களை கொடுத்து உபாசிக்கக் கூறுகின்றது.

அவைகள்,

1. பாவமற்றது,
2. வயதற்றது,
3. மரணமற்றது,
4. துயரமற்றது
5. பசியற்றது,
6. தாகமற்றது,
7. நிறைவேறுகின்றஆசை,
8. நிறைவேறுகின்ற சங்கல்பம் ஆகியன.

இந்த அதிகாரத்துவத்தை வளர்த்து விட்டால் இங்கேயே, இப்பொழுதே ஞானத்தை அடையலாம்.

ஆகாசம் என்பது எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு இருக்கிறது. ஆகாசம் பிளவுபடாதது. வெளியே தெரியும்

ஆகாசம் எவ்வளவு பெரியதோ அதைப் போன்றுதான் இதயத்துக்குள் இருக்கிற ஆகாசமும் ஆகும்.

இதயம் சிறியதாக இருக்கலாம் ஆனால், ஆகாசம் பிளவுப்படாமல் அங்கேயும் இருக்கின்றது.

அதாவது, எவ்வாறு, வெளியே உள்ள ஆகாசமே மண் பானைக்குள்ளேயும் இருக்கின்றது. அதாவது, வெளியே உள்ள ஆகாசமும், பானைக்கு உள்ளே உள்ள ஆகாசமும் உண்மையில் பிரிவில்லை. ஆனால், நம் பார்வைக்கு அந்த பானை என்ற உபாதியின் வாயிலாக இரண்டும் பிரிந்து உள்ளதுப் போன்று காணப்படுகின்றது.

அவ்வாறே, இந்த மனித உடலின் உள்ளே உள்ள ஆகாசமும், வெளியில் உள்ள ஆகாசமும் ஒன்றே. நம் பார்வைக்கு இந்த உடல் என்ற உபாதியின் காரணமாக இரண்டாகப் பிரிந்திருப்பதுப் போன்று தோன்றுகின்றது.

இந்த மொத்த பிரபஞ்சமும் ஆகாசத்துக்குள் இருக்கின்றது. அதைப்போன்று, இந்த ஆகாசம் நம் இதயத்துக்குள் இருக்கிறது.

"நான் பிரபஞ்சத்தில் இருப்பதைப் போல, இந்த பிரபஞ்சம் என்னுள் இருக்கின்றது".

எனவே, அனைத்தும் நம் உடலின் உள்ளேதான் இருக்கிறது. மூன்று காலத்திலும் தோன்றி அழியும் அனைத்தும் இதே உடலின் உள்ளே இருக்கின்றது.

உடல் அழிந்து விட்டால், அதனுள் இருக்கும் ஆகாசமும் அழிந்து விடுமா? என்றால், உடல் அழிவால் ஆகாசத்திற்கு அழிவு உண்டாகாது.

அது சத்யமானது, நித்யமானது, எங்கும், எப்பொழுதும் வியாபித்திருக்கின்றது, அதுவே ஆத்மா, அதுவே **பிரம்மம்** எனப்படுகின்றது.

மனிதனின் கண்ணிற்கு தெரிகின்ற உடலைப் போன்றே கண்ணிற்கு புலப்படாத சூக்ஷும உடலை மனம் என்று அழைக்கின்றோம்.

ஒரு மனிதனின் கண்ணிற்கு தெரியாத மனதில் தோன்றும் ஆசையானது, அவனது சங்கல்பத்தின் (சம்ஸ்காரங்கள்) வாயிலாக உருவாகின்றது.

ஒவ்வொருவரும் பலவிதமான சங்கல்பங்களை (இதை செய்ய வேண்டும், அதை செய்ய வேண்டும் என்று) நினைக்கின்றனர். இந்த சங்கல்பங்கள் அந்த மனிதனின் காரண தேகத்தின் **(சஞ்சித கர்மா)** வாயிலாக வெளிப்படுகின்றது.

அதாவது, சங்கல்பங்களை சேகரித்து வைத்துக் கொண்டுள்ள காரண தேகம் ஒருவனுக்கு அந்த சங்கல்பத்திற்கு

தக்கவாறு கண்ணிற்குத் தெரியாத சூக்ஷும உடலான மனமாக வெளிப்படுகின்றது.

அதன்பிறகு, அந்த மனதின் ஆசைகளை செயல் முறையில் செயல்படுத்த தேவையான கண்ணிற்குத் தெரிகின்ற இந்த ஸ்தூல உடல் எடுத்து இந்த புவியில் பிறக்கின்றது. அதன் ஆசைகளை சுக, துக்கங்களாக அனுபவிக்கின்றது.

ஆகவே, மனதில் உண்டாகும் எண்ணங்களை கவனத்துடன் ஆராய்ந்து இந்த எண்ணம் யாருக்கு உண்டாகின்றது, இந்த எண்ணத்தை ஆசையாக மாற்றிக் கொண்டால், அது செயல் செய்யத் தூண்டும் என்பதை அறிந்து, அந்த ஆசைகளை கட்டுக்குள் கொண்டுவந்து கவனத்துடன் கையால்பவனே சங்கல்பங்களை சரியாக நிர்ணயிக்கின்றான்.

இந்த சங்கல்பங்களை ஈஸ்வர காரிய நிமித்தம் ஒருவன் காரணதேகத்தில் சேகரித்து வைத்திருந்தால், அந்த ஈஸ்வர சங்கல்பம் அவனது மனதில் உதித்து, அது ஆசையாக மாறி, அந்த ஆசை உடனடியாக நிறை வேறுகின்றது. அதாவது, ஈஸ்வரனது சங்கல்பம் உடனே நிறைவேறுகின்றது.

இப்படிப்பட்ட ஈஸ்வரனைத் தான் இதயக் குகை ஆகாசத்தில் வைத்து தியானிக்க வேண்டும். இதைப் புரிந்து கொண்டு விட்டால், எளிதில் ஞானம் அடைந்து விடலாம்.

இந்த உலகத்தில் ஒருவன் அடைகின்ற எதுவுமே அழியக்கூடியது. அதுப்போல சொர்க்க லோகமும், இந்திர லோகமும் நிலையற்றது. அதனால், இங்கேயே தீவிர முயற்சி செய்து ஞானத்தை அடைந்து விட வேண்டும்.

இங்கு கர்மத்தினால் அடையப்பட்ட போகங்கள் எப்படி அழிந்து விடுகின்றனவோ, அதுப்போலவே புண்ணியத்தினால் அடைந்த லோகங்களும் அழியக் கூடியவைகளே.

ஒருவன் இந்த மனித ஜென்மத்தில் ஞானத்தை அடையாமல் இறந்து விட்டால், அவனது பாவ புண்ணியத்திற்கு ஏற்ப மீண்டும் உடல் கிடைக்கப்பெற்று சுக, துக்கத்தை அனுபவித்துக்கொண்டிருப்பான்.

அஞ்ஞானிகள் ஆசைகளை பூர்த்தி செய்ய முடியாமல் சோகத்தை அனுபவிக்கின்றார்கள். ஆனால், ஞானிக்கு ஆசை வந்தாலே அது பூர்த்தியாகி விடும். காரணம், அவனது ஆசைகள் அனைத்துமே **ஈஸ்வர சங்கல்பம்** ஆகும்.

யாரொருவர் இங்கேயே ஆத்மாவை அறிந்து கொள்கின்றார்களோ அவர்கள் எல்லா உலகத்திலும் முக்தனாகவே இருக்கின்றார்கள்.

எனவே இந்த மனித ஜென்மத்தை ஒருவன் நன்கு பயன்படுத்திக்கொண்டு, கிடைத்த தேகத்தைக் கொண்டு, விசாரம் செய்து ஞானத்தை அடைந்து விட வேண்டும்.

சங்கல்பம் என்பது ஆழ்மனதில் தோன்றும் ஆசை, அதாவது ஆசையின் விதை. ஈஸ்வரனுக்கு உண்டாகின்ற சங்கல்பங்கள் யாவும் உடனே பூர்த்தியாகிவிடும். இப்படி ஈஸ்வரனை உபாசித்தால், உபாசிக்கின்றவனின் சங்கல்பமும் உடனடியாக நிறைவேறி விடும். இதற்கு "**சத்ய சங்கல்பம்**" என்று பெயர்.

## 16. ஈஸ்வரனின் சத்ய சங்கல்பம்

ஒருவன் அடைய நினைக்கும் அத்தனையும் **மாயை** என்ற பொய்யான மறைப்பால் மறைக்கப்பட்டு, உண்மையாக இருப்பது போன்று தோன்றுகின்றது.

அந்தப்பொய் திரையை நீக்கினால் சத்ய சங்கல்பம் வந்து விடும்.

உடலுக்கு வெளியே உள்ள பொருட்களின் மீது உண்டாகின்ற ஆசை, அதை அடைவதில் தீவிர முயற்சி போன்றவைகளெல்லாம் அறியாமையின் காரணமாக உண்டாகின்றது என்ற அறிவு உண்டாகி விட்டால் போதும், அவனது ஆசைகள் மறைந்துவிடும்.

சிறிய ஆசைகளை பெரியதாக்கி அதை அடைவதில் முயற்சி செய்து கொண்டிருப்பதும், அல்பமான விஷயங்களை நோக்கி இழுக்கப்பட்டு, அதன் பின்னே ஓடிக்கொண்டிருப்பதும், ஒருவன் அவனுக்குள்ளே உள்ள உயர்ந்த விஷயத்தை அறிய நாட்டமின்றி இருப்பதும், அவனுடைய அறியாமை யினால் மட்டுமே உண்டாகின்றது.

இந்த அறியாமையை நீக்கவே, சாஸ்திரம் அனைத்து உபதேசங்களையும் உபநிஷதங்களின் வாயிலாக கொடுக்கின்றது. அதாவது, ஏற்கனவே ஏற்றி வைத்துக் கொண்டுள்ள பல்வேறு எண்ணங்களை நாம் இறக்கி வைத்து,

எண்ணங்களற்ற நிலையிலே, எளிதாக அந்த மெய்யறிவை அறிந்திட முடியும் என்கின்றது சாஸ்திரம். இந்த மெய்யறிவு வருவதே 'ஞானம்' எனப்படுகின்றது.

## 17. ஈஸ்வர ஸ்வரூபம் (பெருமை)

**ஹிரண்யநிதி:** எல்லா நலனும் வளமும் உடையவர். எல்லாவித ஐஸ்வர்யமும் உடையவர், இப்படிப்பட்டவரை இதய ஆகாசத்துக்குள் வைத்து தியானித்தால் எல்லா ஐஸ்வர்யமும் அவனுள்ளேயே இருப்பதை அவன் உணரலாம்.

ஒருவன் தங்கப்புதையல் புதைக்கப்பட்டிருக்கும் நிலத்தின் மீது வீடு கட்டி வசித்துக்கொண்டு, அந்த புதையல் இருப்பதை அறியாமலேயே, அங்கும், இங்கும் அலைந்து திரிந்து பொருள் சம்பாதித்து வசித்து வருவதைப் போன்று, இந்த உடல் என்ற கூட்டுக்குள் அந்த இறைவன் என்ற ஐஸ்வர்யம் இருப்பதை அறியாமல் அங்கும், இங்கும் அலைந்து எதை, எதையோ தேடிக் கொண்டு, அருகே உள்ள புதையலை அடையாமல் இருக்கின்றான்.

ஈஸ்வரன் எல்லா ஜீவர்களின் இதயத்துக்குள்ளும் இருக்கிறார் என்ற உண்மையை உணர்ந்து உபாசிக்கின்ற உண்மையான சாதகர்கள், ஒவ்வொரு நாளும் அவரை தன் ஞானக் கண்களால் பார்த்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

இதுபோன்று, நிர்குண பிரம்மத்தை அறிந்த ஞானிகள் போல, ஈஸ்வரனை உபாசித்து அந்த நிலையை ஒவ்வொருவரும் அடைய முடியும்.

# 18. பேருணர்வு அனுபவம்

நம்முடைய உணர்வு வெளிப்பாட்டினால், உண்டாகும் அனுபவங்கள் பலவாறாக உள்ளது. அதிலே, பசி உணர்வு, மல, ஜலம் கழிக்கும் உணர்வு, வலி உணர்வு, காம உணர்வு, சந்தோஷ உணர்வு என என்னற்ற உணர்வுகளை நாம் அறிவது என்பது, நம்மிடம் உள்ள அறிவுணர்வின் விளைவாகவே அந்த அனுபவம் நமக்குக் கிட்டுகின்றது.

அந்தக்கணம், அந்த அனுபவம் நிகழ்வது என்பது, நம் உணர்வு வெளியில்தான்.

அந்த உணர்வுதான் '**சித்**' எனப்படுகிறது.

வெளிதான் '**அம்பலம்**' எனப்படுகிறது.

அதாவது, உணர்வு வெளியைத்தான் "**சிற்றம்பலம்**" என்கின்றோம்.

உணர்வு வெளியில்தான் இந்த உலகம் இருக்கின்றது.

உண்மையில், உலகம் என்பது ஒரு இடமில்லை.

**அது ஓர் அனுபவம்.**

நாம் பிரபஞ்சத்தில் இருக்கின்றோம் என்று நம்பு கின்றோம். ஆனால், உண்மையில் இந்த பிரபஞ்சம்தான் நம்முள் இருக்கின்றது.

நம் உணர்வு (பேரறிவு) வெளியில்தான் இந்த உலகம் எழுகின்றது, இருக்கின்றது, அழிகின்றது. ஆனால், அந்த உணர்வுவெளி (பேரறிவு) எப்போதும் இருக்கின்றது.

இந்த உணர்வு வெளியைத்தான் "**சிதாகாசம்**" (அறிவாகாசம்) என்கின்றோம். இதனைத்தான், பெரியவர்கள் மகாகாசம், சிதாகாசம், பிரேமாகாசம், பரமாகாசம் என்று வகைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

மகாகாசம் என்பது ஐம்பூதங்களாலான பௌதிக உலகம்.

சிதாகாசம் என்பது உணர்வுவெளி. அதாவது, பேரறிவின் இருப்பு.

பிரேமாகாசம் என்பது அன்பின் எல்லையற்ற விரிவு.

பரமாகாசம் என்பது அனைத்தையும் கடந்த, அனைத்தையும் தன்னுள் அடக்கிய முதலும் முடிவுமற்ற பரப்பிரம்மம்.

அடுத்து, தனி உயிரின் தளங்களாக ஐந்து கோசங்களைப் பார்க்கலாம்.

அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம்.

இந்த ஐந்து தளங்களுக்கு அப்பால், தனி உயிர் என்னும் தன்மை கடந்து, பேரண்டத்தின் தன்மைகளாக இருக்கும் தளங்கள் **சித், சத்,** இரண்டும் உள்ளன.

'**சித்**' என்பது **உணர்வு** நிலை.

'**சத்**' என்பது '**இருப்பு**'. ஆக மொத்தம் ஏழு தளங்கள்.

**அன்னமய கோசம்** என்பது ஸ்தூல உடல். அதாவது, பஞ்ச பூதங்களாலான இந்த பரு உடல்.

நாம் உட்கொள்ளும் உணவு, நம் உடலின் செல் களாகவும், திசுக்களாகவும், எலும்புகளாகவும் உருமாறுகின்றன. அந்த உருமாற்றத்திற்குக் காரணமான அந்த அகண்ட அறிவு, அந்த உடல் உறுப்புகள் செயல்படத் தேவையான சக்தியையும் அந்த உணவின் வாயிலாகத்தான் உண்டாக்கிக் கொடுக்கின்றன.

ஆக, அந்த உடலை உருவாக்கும் அந்த அறிவே, அந்த உடல் செயல்படத்தேவையான சக்தியையும் அளிக்கிறது எனும் பொழுது, அதன் அதி சூக்ஷுமத்தை அறிவது என்பது சாதாரண அறிவு படைத்த சீவர்களுக்கு ஒரு நாளும் சாத்தியமாகாது.

ஆகவே, மனிதன் மட்டுமே தனக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேக ஆறாம் அறிவாகிய (மனம்) பகுத்தறிவின் மூலம், நன்மை, தீமைகளை அறிந்து, அந்த அகண்டத்தை அனுபவமாக்க முடியும் என்றால், அது இந்த அன்னத்தால் ஆன, மனித தேகத்தால் மட்டுமே முடியும்.

அவ்வாறே, **பிராணமய கோசம்,** நம் சுவாசிக்கும் சுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. நாம் மூச்சை உள்ளிழுக்கும் போது, அந்த காற்றுடன் உயிர்ச்சக்தியும் (பிராணன்) சேர்ந்து உள்ளே போய், நம்முடைய நாடி நரம்புகளில் ஓடுகிறது. அதன் வாயிலாக நம் உடலின் உள்ளியக்கங்களை இந்தச் சக்தி ஒழுங்கு படுத்துகிறது.

**மனோமய கோசம்** என்பது, மனம் என்று நாம் அழைக்கும் எண்ணங்களால் ஆன இயக்கங்களின் தொகுப்பு:

அதிலே, நினைவு, ஞாபகப்படுத்துதல், சிந்தனை, உணர்ச்சிகள், என அனைத்துமே கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில், எதிர்காலம் குறித்த திட்டங்களை அமைத்துச் செயல்படுத்துவது எனலாம்.

**விஞ்ஞானமய கோசம்** என்பது `**உயர்மனம்**` அல்லது “**புத்தி**” என்றும் சொல்லலாம். இந்த புத்தி சக்தியின் வாயிலாகத்தான், வாழ்க்கையைப் பற்றிய ஆழமான கேள்விகளை எழுப்பி, நம்மைப் பற்றியும், இந்தப்

பிரபஞ்சத்தைப் பற்றியுமான உண்மையை நோக்கிய ஒரு தேடலில் நம்மை வழி நடத்திச் செல்வது.

அதாவது, நம் இருப்பின் நோக்கம், வாழ்வின் குறிக்கோள், இவை குறித்த தீவிரக் கவனம் என எல்லாமே, இந்த புத்தி சக்தியினால்தான் மனிதன் பிரித்தரிய முடிகிறது. அதனால், மனிதன் தன்னை அறிந்து தன்மயம் ஆக வேண்டுமானால், இந்த புத்தி சக்தியைக் கொண்டு, நன்மை, தீமைகளை பகுத்தறிய வேண்டும்.

அடுத்து, **ஆனந்தமய கோசம்** என்பது, தனியாக பிரிந்த உயிரும் (சீவனும்), அதற்கு அதாரமான பேருண்மையும் (பரமாத்மாவும்) சந்திக்கும் எல்லையில் உள்ளது.

ஒருபுறத்தில் விஞ்ஞானமய கோசமும் மறுபுறம் சிதாகாசமும் விரிந்திருக்க அதன் சந்திப்பில் எழும் ஆனந்தம் இந்தப் பரிமாணத்தில் வெளிப்படுகின்றது.

சிதாகாசத்துடன் தொடர்பு கொண்டிருந்தாலும், இந்த ஆனந்தமய கோசம் என்பது தனி உயிரின் எல்லைக்குள் அடங்கிய ஒன்றுதான் என்பதினால், இதையும் கடந்த ஆன்மாவை அறிவது என்பது, இந்த ஐந்து கோஷங்களுக்கும் அப்பாற்பட்ட “**விழிப்புணர்வு**” என்ற நம்முடைய உணர்வின் உன்னத இருப்பில்தான் இருக்கிறது.

# 19. இறைவனின் நடனம்

'**சித்**' என்னும் உணர்வு (அறிவு) வெளியில்தான் பிரபஞ்சம் என்னும் அனுபவம் இருப்பு கொள்கிறது.

நடப்பவை அனைத்தும், '**வெட்ட வெளி**' என்ற நம்முடைய **உணர்வு வெளியில்**தான் நடக்கின்றன. இங்குதான் '**அறிதல்**' நிகழ்கிறது.

எல்லாம் அறியும் "**அறிவு**" என்பது இதுதான்.

இதை (சித்) அறிவதுதான் இருப்பின் (சத்) நோக்கம் என்றே சொல்லலாம். அந்த நோக்கம் சரியாக நிறைவேறி விட்டால், அதன்பின்பு '**ஆனந்தம்**' மட்டுமே நிலைத்து நிற்கும்.

இதைத்தான் (சத்+சித்+ஆனந்தம்) "சத்சிதானந்தம்" என்கின்றோம்.

அதாவது, "எதை அறிந்துக் கொண்டால், வேறு எதையும் அறியத் தேவையில்லையோ, அதை அறிவதே அறிவு!" என்கின்றது சாஸ்திரம்.

இதைத்தான்,

"எல்லாம் அறியும் அறிவுதனைவிட்டு
எல்லாம் அறிந்தும் லாபமிங்கில்லை
எல்லாம் அறியும் அறிவை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையெனலாமே" – திருமூலர்.

இங்குதான் இறைவனின் நடனம் அந்த சக்தியுடன் (பிரபஞ்சத்தின் தோற்றம் - மாயை) சேர்ந்து நடக்கிறது.

அதனால்தான் `**சித்ரூபிணி**` என்று பிரபஞ்சத்தின் தாயாக '**இதயவெளி**' யைக் குறிக்கிறார்கள். பிரபஞ்சத்தின் ஆனந்தக் கூத்து நடக்கும் அரங்கம்தான் இது. இதைத்தான் **சிதம்பரம்** என்றும் '**சிற்றம்பலம்**' என்றும் அழைக்கின்றோம்.

அடுத்து, `**சத்**` என்னும் ஆதார ஸ்தலமே **`இருப்பு`** **(existence)** எனப்படுகின்றது.

எது இருந்தாலும், இல்லாவிட்டாலும், அதாவது, வந்தாலும், போனாலும் என்றும், எப்போதும் இருப்பது, இந்த "**இருப்பு**" (சத்) மட்டுமே ஆகும்.

இதுவே, '**பிரம்மம்**'.

இதுதான் பரம்பொருள். இதைத்தான் "**இறைவன்**" என்கிறோம். அதுவே, '**வெட்டவெளி**' என்றும் அழைக்கப் படுகிறது.

அறிவதற்கு ஏதும் இல்லாமல் போகும் போது, அனைத்தையும் அறியும் `**சித்**` (**அறிவு**) என்னும் சுத்தப் பிரக்ஞையும் `**சத்**` (**இருப்பு**) என்னும் ஆதாரத்தில்தான் நிற்கின்றது. அந்த ஆதாரம்தான் **வெட்டவெளி.**

அந்த ஆதார ஸ்தலத்தைத்தான் நம்முடைய புரிதலுக்காக இந்த பூ உலகில் **சிதம்பரம், சிற்றம்பலம், சிற்சபை, திருவரங்கம்** என்று பலவாறாக கூறுகிறோம்.

இதைத்தான் நம் அனுபவம் நிகழும் **காலமற்ற பெருவெளி** என்கின்றோம்.

அனுபவிப்பவன், அனுபவம், அனுபவித்தல் என்னும் "திரிபுடி" (மூன்று) நிலைகளைக் கடந்த **அகண்டாகாரம்** அது.

நான் துய்ப்பவன் இல்லை
துய்க்கப்படும் பொருள் இல்லை
துய்ப்பும் அல்ல.

நான் விழிப்பு
நான் உணர்வின் பேரின்ப உருவம்
நானே சிவம், நானே சிவம்!

என்று தன் ஆத்ம ஸ்வரூபத்தைப் பற்றி பகவான் ஆதிசங்கரரும் தமது **நிர்வாண சடகத்தில்** மிக அழகாக கூறுகிறார்.

உடலையே உண்மையெனக் கருதிக்கொண்டு, தன் பிற பரிமாணங்களைப் பற்றிய அறிதலில்லாமல், அறியாமையில் சிக்கிக் கொண்ட மனதின் தேவையற்ற அனுபவச் சேற்றில் சிக்கி, துன்பமே வாழ்க்கையென வாழும் சீவர்களாகிய நம்மை விழிப்புக்கு அழைத்துச் செல்வது எது தெரியுமா?...

‘**சித்**’ **(அறிவு)** என்னும் ‘**திரு**’ (**இறைவன்**) நடனமாடும் “**உணர்வுவெளி**” தான்.

இந்த உணர்வு வெளியில்தான் (சிற்றம்பலத்தில்) இந்த அரங்கத்தில், இந்தச் சபையில்தான் நாம் விழித்துக்கொள்ள வேண்டும்.

ஆம்! அதுவே “**நான்**”.

அந்த நானே சிவம். நான் இருப்பதினால்தான் இந்த உலகம் எனக்கு முன்பாகப் பிரகாசிக்கின்றது.

நான் இருப்பதினால்தான் இந்த சூரிய, சந்திரர்கள், நட்சத்திரங்கள் என அனைத்தும் பிரகாசிக்கின்றன.

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்னி |
தமேவ பாந்தமனுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி || – கடோபநிஷதம்

அங்கே சூரியன் ஒளிர்வதில்லை, சந்திரனும், நட்சத்திரக் கூட்டங்களும் ஒளிர்வதில்லை, மின்னல் கூட ஒளிர்வதில்லை. அப்படி இருக்க, இந்த அக்கினி மட்டும் (தீபாராதனை - தீப ஒளி) எப்படி ஒளிர முடியும்?

ஒளிர்கின்ற என்னை (உணர்வை) அனுசரித்தே எல்லாம் ஒளிர்கின்றன. அனைத்தும் என் உணர்வுப் பிரகாசத்தால் ஒளிர்கின்றன என்கின்றது கடோபநிஷதம்.

பொதுவாக, நமக்கு புறத்தில் அனைத்தையும் காண ஒரு விளக்கின் வெளிச்சம் தேவை அல்லவா?

அதுவே, சூரியனைக் காண விளக்கு தேவையா என்ன?

தேவையில்லை அல்லவா?!

அதுப்போலவே, நான் இருப்பதை எனக்கு அறிய இன்னொரு வெளிச்சம் தேவை இல்லை. எந்த இருளிலும்

என்னை நான் அறிவேன். அதை நான் எவ்வாறு அறிகிறேன். நான் எனும் உணர்வு மூலமாக அறிகிறேன்.

ஆம்! அந்த உணர்வே அனைத்தையும் அறியும் அறிவு. ஆக, நானே அந்த அறிவுச்சுடர், எனது பிரகாசமே உணர்வு வெளி என்று அறிவதைத்தான் '**தத்வமஸி**' என்பதாக சாஸ்திரம் உபதேசிக்கிறது.

ஆக, சூரியனின் பிரகாசத்தால்தான் எல்லாம் ஒளிர்வதுப் போன்று, அந்த பேருணர்வின் (பேரறிவின்) பிரகாசத்தால்தான் "**நான்**" அனைத்தையும் காண முடிகின்றது.

எனவே, உலகப் பொருட்களைக் காண்பதற்கு உதவுகின்ற **சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்** என எல்லாமே பிரகாசிப்பது என்னுடைய (பேருணர்வின்) அறிவுப் பிரகாசத்தால்தான் என்பதை என்னால் எளிதாக அறிய முடிகின்றது.

எனவே, ஆன்ம (அறிவு) ஒளியைக் காட்ட, புறத்திலுள்ள வெளிச்சங்களால் இயலாது. அதாவது, தீப ஒளி, சூரிய ஒளி, சந்திர ஒளி, நட்சத்திர ஒளி, கற்பூர ஒளி போன்ற எந்த ஒளிகளாலும், என்னை எனக்குக் காட்டிக் கொடுக்க முடியாது.

ஆகவே, அந்த பேருணர்வே என்னை எனக்கு காட்டிக் கொடுக்கின்றது. அதுவும் "**நான் இருக்கிறேன்**" என்று என்னை எனக்குக் காட்டுகிறது.

பொதுவாக ஒளி வழிபாடு என்றெல்லாம், நாம் அனுசரிக்கும் சாதாரணமான தீப ஒளியைப் போன்றது அல்ல ஆன்ம ஒளி.

தீப ஒளியைப் போன்று அந்த பேரொளியானது இருக்கும் என்றும், அதை நமது புருவ மத்தியிலே காண முடியும் என்றும் எண்ணிக் கொண்டு, ஏதேனும் பயிற்சிகளை செய்துக் கொண்டிருக்கிறோம்.

இதுவே, அறியாமை எனப்படுகிறது.

அதாவது, மின்சார விளக்கிலிருந்து வருகின்ற ஒளி போன்றதல்ல, இந்த ஆன்ம ஒளி. அல்லது அறிவுப் பிரகாசம் என்பது. ஆகவே, அனைத்தையும் நாம் அறிவது என்பது, "நான் இருக்கிறேன்" என்ற ஆன்ம ஒளி அறிவுப் பிரகாசத்தால்தான்.

இந்த ஒளி நாம் புறத்தில் காண்கின்ற சாதாரண ஒளி போன்றது அல்ல. அதாவது, பௌதீக ஒளி அல்ல.

**அது ஒரு உணர்வு வெளி அனுபவம்!**

அதாவது, ஆன்ம அனுபூதி, இறையனுபூதி என்பது ஓர் அனுபவம். இது உணர வேண்டியது. உணர்ந்து அனுபவிக்க வேண்டியது. மற்ற புறக் காட்சிகள் போல அதனைக் காண முடியாது.

**அன்பு, இரக்கம், இன்பம்** போன்றவைகளை யாரும் காண முடியாது, அனுபவிக்கவே முடியும். அதுப்போன்று, ஆன்ம (இறை) அனுபூதியையும் அனுபவிக்க முடியுமே தவிர காண முடியாது.


இதையே, ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனிடம், உனது இந்த புறக் கண்ணினால் என்னைக் காண இயலாது. எனவே உனக்கு என்னுடைய (அறிவுக்கண்) தெய்வீகக் கண்ணைத் தருகிறேன் என்று கூறுகிறார். (கீதை, 11.8).

அந்த **தெய்வீகக் கண்** அல்லது **அறிவுக் கண்** என்பது “**ஆத்ம ஞானம்**” ஆகும். ஆம் அந்த ஆத்ம ஞானத்தினால் தான், தன்னை அறிந்து **தன்மயமாதல்** என்பது நடைபெறும். தன்னை அறிவது என்பது தன்னுணர்வை அறிவது. நான் இருக்கிறேன் என்று விழிப்பு நிலையில் தன்னை உணர்வது.

ஆம்! அந்த விழிப்பே, **பேருணர்வு.** அந்த பேருணர்வே **அறிவு.** அந்த அறிவே **பரமன்.** அந்த பரமனின் இருப்பே வெட்டவெளி என்ற **பராகாசம்.** அதுவே, **திருசிற்றம்பலம்.**

அதாவது, **திரு** [இறைவ(நா)ன்] **சிற்** (உணர்வு வெளி) **அம்பலம்** (ஆகாசம்).

# சிதம்பர இரகசியம்



'சித்' என்னும் உணர்வு (அறிவு) வெளியில்தான் பிரபஞ்சம் என்னும் அனுபவம் இருப்புக் கொள்கிறது.

நடப்பவை அனைத்தும் இந்த வெட்ட 'வெளி' யில்தான் நடக்கின்றன.

இங்குதான் 'அறிதல்' நிகழ்கிறது.

எல்லாம் அறியும் "அறிவு" இதுதான்.